# ரெட்டி மலர்

உறவை வளர்ப்போம் உணர்வை காப்போம்

தமிழ் மாத இதழ்

REDDY MALAR, Tamil Monthly

| | | | |
|---|---|---|---|
| மலர் : XVII | இதழ் : 10 | ஜனவரி 2024 | விலை. ரூ.15/– |
| Vol. : XVII | Issue No : 10 | JANUARY 2024 | Price. Rs.15/ |


## தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரண உதவிகள்







## பெரம்பலூர் மாவட்ட ரெட்டி நலச் சங்க குடும்ப விழா நிகழ்வு




செய்தி உள்ளே..... 1

உறவை வளர்ப்போம்! உணர்வைக் காப்போம்!

என்றென்றும் உங்களுடன்

# ஹரிணி ஜுவல்லர்ஸ்



## தங்கநகை சேமிப்புத் திட்டத்தில் செய்கூலி, சேதாரம் இல்லை

64-A, 65, சிந்தாமணி பஜார், (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 2

Cell: 0431-2704916, 81488 24916 e-mail: harinijewell2014@gmail.com

# ரெட்டி மலர்

நிறுவனர் :
"கல்வி காவலர்" கே.ரெங்கராஜன் (KRT)

மலர் : XVII ஜனவரி 2024 இதழ் : 10

வெளியீட்டாளர் : V. செல்வராஜு
கௌரவ ஆசிரியர் : R. புகழேந்திரன்
இணை ஆசிரியர்கள் : R. அன்பழகன்
P. ஜனார்த்தனம்
துணை ஆசிரியர்கள் : D. மணிவாசகன்
V. ஜெயக்குமார்
சட்ட ஆலோசகர் : R. பாபு B.A.,B.L.,

**விற்பனைப்பிரிவு மேலாளர்**

R. காமராஜ்

**விற்பனைப்பிரிவு நிர்வாகிகள்**

R. நந்தகுமார்
N. சுந்தரராஜு
M. ஜெயபிரகாஷ்

**விளம்பரப்பிரிவு மேலாளர்கள்**

J. ஐயப்பன்
P. மோகன்

**விளம்பரப்பிரிவு நிர்வாகிகள்**

S. காமராஜ்
R. பார்த்திபன்
S. பூவேந்தரசு

**ஆலோசனைக் குழு**

L. தமிழரசன், சென்னை
திருமதி.தேவிமோகன்
S. மோகன், கோவை
N. பெரியசாமி, திருச்சி
R.V. செல்வகுமார், விளாத்திகுளம்
R. சண்முகைய்யா, RSR சிவகாசி
P. தாமோதரன், தாம்பரம்
M. கிருஷ்ணசாமி, சென்னை
T. ரவிச்சந்திரன், விழுப்புரம்
R.D. ராஜமுருகன், விருதுநகர்
S. சதீஷ்குமார், மதுரை (மோனிகா)
S. ராமராஜன், திண்டுக்கல்
K. சூரியகுமார், தஞ்சாவூர் மாவட்டம்

## இதழின் உள்ளே........


- ஆசிரியர் தலையங்கம் - 4
- நிறுவனத்தலைவர் மடல் - 5
- உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத் தொடர் - 6-8
- தென்மாவட்டங்களில் வெள்ள நிவாரணபணி - 9-13
- நெ.1 டோல்கேட் ரெட்டி நலச்சங்க குடும்ப விழா - 14-16
- துறையூர் நகர ரெட்டி நலச்சங்க குடும்ப விழா - 17-19
- பெரம்பலூர் மாவட்ட ரெட்டி நலச்சங்க குடும்ப விழா - 20-22
- உறையூர் ரெட்டி நலச்சங்க குடும்ப விழா - 23
- குடியரசு தின விழாவில் விருது - 24
- விவசாயப் பகுதி - 25-26
- கீதையின்படி தொழில்கள் புரிவோம் - 27-28
- மருத்துவப் பகுதி - 29-30
- திருமணத் தகவல்கள் - 32-33
- தபால் பெட்டி - 34


மனித வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு சவாலாகும். ஒவ்வொரு சவாலும் சாதகமானதொரு சந்தர்ப்பத்தை அளிக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பமும் ஒரு குறிக்கோளை ஏற்படுத்தித் தருகிறது. ஒவ்வொரு குறிக்கோளும் நல்லதொரு வாய்ப்பை அளிக்கிறது. ஒரே ஒரு வாய்ப்பு நம் வாழ்க்கையையே மாற்றியமைத்து நம்மைச் சிறப்படையச் செய்கிறது.

**அலுவலக முகவரி**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு,
ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
: 044 - 2485 3333, 96888 77700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Matrimony Online Website :
www.reddymatrimony.co.in
Subscribe : YouTube : oprchannel
http://youtube.com/@oprchannel1157

# மனதில் உறுதி வேண்டும்! புது வருட உறுதிமொழி

## தலையங்கம்

ஒரு செயலை எடுத்தால் எத்தனை தடையானாலும் தகர்த்தெறிந்து வெற்றி காணும் மன உறுதியே ஊக்கம் ஆகும். வெறும் கல்வி மட்டும் வெற்றியைத்தந்து விடுவதில்லை. மன உறுதியுடன் கூடிய முயற்சியே வெற்றிக்கு அடித்தளம் ஆகும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் குழந்தைகள் தெருவிலே இறங்கி விளையாடு வார்கள். கோலிக்குண்டு, பம்பரம், கிட்டிப்புள், கபடி என்று சிறுவர்களும் பாண்டி, கோ..கோ, கண்ணாமூச்சி, நொண்டி என சிறுமியர்களும் மாலை நேரத்தை மகத்தான நேரமாய் மாற்றுவர்.

இதனால் வெற்றி பெறும் போதும், தோல்வியுறும் போதும் எழுச்சியும், தளர்ச்சியும் மாறி, மாறி சந்திப்பர். தோற்றவர்கள் இருட்டிய பிறகும் கூட உறுதியாகச் சொல்வார்கள் 'நாளைக்கு நான் ஜெயிக்காமல் விட மாட்டேன் என்று'. மறுநாள் உறுதியோடு ஜெயித்துக் காட்டுவர். இவையெல்லாம் வெறும் விளையாட்டு மட்டுமல்ல வாழ்வியல் பாடங்கள்.

பகவான் கிருஷ்ணரை ஒருமுறை கர்ணன் சந்தித்தான். தனது மனதில் இருந்த அத்தனை ஆதங்கங்களையும் கொட்டித் தீர்த்தான். பகவானே! நான் என்ன பிழை செய்தேன். என் வாழ்வு ஏன் இப்படி தடம் மாறிப்போனது என நெஞ்சம் வெடிக்கப் புலம்பினான்.

பகவான் புன்முறுவலோடு பதிலளித்தார். "கர்ணா! உன் வாழ்வில் மட்டும் தான் துயரம் இருக்கிறது என்று எண்ணாதே. என் வாழ்வின் நிலை என்ன... நான் பிறந்ததே சிறைச்சாலையில் தான். பிறந்த உடனேயே பெற்ற தாயிடம் தாய்பால் கூட அருந்த வழியின்றி இடமாற்றம் செய்யப்பெற்றேன். என்னைக்கொல்வதற்காக என் தாய்மாமன் கம்சன் இருபத்து நான்கு மணி நேரமும் விழித்திருந்தான். பத்து மாதத்திலேயே பூதகி என்ற அரக்கியை அனுப்பினான். தொடர்ந்து அரக்கர் படை வந்து கொண்டே இருந்தது.

விளையாடும் பொருட்களில் இருந்து, பயணம் செய்யும் வண்டி வரை அரக்கர்கள் ஒளிந்திருந்து ஒழித்துக்கட்ட முயன்றனர். நான் யாரைக்காப்பாற் றினேனோ அவர்களே எனக்குத் திருட்டு பட்டமும் கட்டினார்கள். இப்படி என் வாழ்வு முழுவதும் துரத்தல் தான் ஏராளம். ஆயினும் ஒருபொழுதும் நான் வாழ்க்கையைச்சலித்துக் கொண்டதில்லை".

ஒரு சிலையைச் செதுக்க கல்லில் இருந்து தேவையற்ற பகுதியைச் செதுக்கி எடுப்பது போன்று உன்னை மிளிர வைக்க காலம் உன் மீது உளிகளைக் கொண்டு செதுக்கினால் தானே நீ காலம் கடந்தும் பேசப்பட முடியும். எனவே எப்போதும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் இருக்கப் பழகுவாயாக என்றார். மனதில் உறுதி வேண்டும் என்றார் மகாகவி பாரதி. அந்த உறுதி தான் ஊக்கத்தை தந்து ஆக்கத்தைத் தருகின்றது.

மாவீரன் அலெக்சாண்டர் தனது படைகள் போருக்கு புறப்படும் முன் அவர்கள் இந்தப் போரில் வெற்றியா? தோல்வியா? எனப் பார்ப்பதற்காக ஒரு நாணயத்தை வானை நோக்கி வீசுவார். தலைப்பகுதி வந்தால் வெற்றி எனவும், பூப்பகுதி வந்தால் வெற்றி யில்லை எனவும் சொல்லி வீசுவார். தலைப்பகுதியே தான் விழும். வீரர்கள் உற்சாகத்துடன் புறப்படுவார்கள். வெற்றியுடன் திரும்புவார்கள். ஒருமுறை தளபதி அலெக்சாண்டரிடம் எப்படி மன்னா? எல்லா முறையும் தலையே விழுகின்றது எனக் கேட்டார்.

அதற்கு அலெக்சாண்டரும் உள்ளே போய் அந்த நாணயத்தை எடுத்து வா... என்றார். தளபதி நாணயத்தோடு வந்தார். நாணயத்தின் இருபுறமும் என்ன இருக்கின்றது என்று பார்... என்றார்.

நாணயத்தின் இருபுறமும் தலையே தான் இருந்தது. ஆச்சர்யத்தோடு பார்த்தார் தளபதி. அதற்கு அலெக்சாண்டரோ புன்னகையுடன் வெற்றி என்பது முதலில் மனதில் இருந்து வரவேண்டும் என்பதற் காகவே இந்த ஏற்பாடு. மனத்தளவில் தலையைப் பார்த்தவுடன் நமக்குத்தான் வெற்றி என்பதைத் தீர்மானிக்கும் வீரர்கள் அதே ஆர்வத்துடன் போரிட்டு வெற்றியையே காண்கின்றனர் என்றார்.

நாம் ஒரு செயலில் இறங்கும் போது தான் அதில் என்னென்ன தடைகள் வருகின்றது என்பதனை சந்தித்துத் தீர்வு காண இயலும். எனவே தான் வள்ளுவரும் மனஉறுதியே ஒருவனுக்கு உண்மையான செல்வமாகும், பிற செல்வங்கள் நிலையில்லாதவை என்று தெரிவிக்கின்றார்.

சீதையைத்தேடிச் சென்ற கூட்டத்தில் அனுமன் மட்டுமே இலங்கைக்குச்செல்ல இயலும் என ஜாம்பவானால் கண்டுபிடிக்கப்பட்டார். அனுமனின் ஆற்றல்களையெல்லாம் எடுத்துரைத்தார். இன்றைக்கு மோட்டிவேஷன்...... என்று சொல்கின்றோமே அதனைத்தான் ஜாம்பவான் செய்தார். அனுமனும் இலங்கை நோக்கி சீதையை தேடி வானில் பறக்கத்தொடங்கினார். அன்புத் தொல்லையால் நாகமலை... எனும் மலை தன் மேல் தங்கி ஓய்வெடுத்து பின் போகச்சொன்னது. மெய் வருத்தம் பாரார், கண் துஞ்சார், எவருடைய தீமையையும் கருதார் என்ற செய்தியின்படி அனுமனும் புன்னகைத்தவாறே மறுத்தார். தனது பணி காத்திருக்கும் இரண்டு ஆன்மாக்கள் தொடர்பானது. எனவே இதிலே ஓய்விற்கோ, தாமதத்திற்கோ வேலையில்லை எனத் தொடர்ந்தார்.

தொடர்ந்து, சுரசை, அங்கார தாரகை என்னும் இரு அரக்கிகள் அனுமனைத் தடுத்தன. இருவரை யும் வீழ்த்தி இலங்கை மண்ணில் கால் பதித்தார். அங்கேயும் இலங்கிணி எனும் நகர்காவல் அரக்கி தடுத்தாள். அவளையும் வென்று இரவெல்லாம் தேடி விடியற்காலை அன்னை சீதையைத்தரிசித்தார் அன்னை வாழ்விற்கே ஒரு விடியலைத் தந்தார்.

ஒரு செயலை மேற்கொள்ளும் போது சோதனை களும் தடைகளும் இயல்பு தான். நமது ரெட்டியார் சமூகமும் விவசாயத்தைப் பெரிதும் நம்பி பல சமூக, பொருளாதார தொய்வுகளை சந்தித்து வருகிறது. கல்வி வாய்ப்புகளில் முன்னேற்றம் இல்லை. அரசுப் பணிகளில் இடம் பெறுதல் முற்றிலும் இல்லை. தொழில்கள் துவங்குவதிலும் முன்னெடுப்பு இல்லை. இத்தகைய அம்சங்களில் நாம் முன்னேற்றம் காண வேண்டுமெனில் விமர்சனங்களைக் காதிலேயே வாங்காமல் தடைகளை உடைத்து சிகரத்தைத் தொட வேண்டும். இதுவே இன்றைய வளரும் தலை முறைக்கு நாம் சொல்லித்தரும் மிக முக்கியமான பாடமாகும்.

புத்தாண்டில் புதிய மனிதனாய் பிறப்போம்! பூமியின் புதல்வர்களாய் பொதுநலம் காப்போம்.

V. செல்வராஜ், ஆசிரியர் / வெளியீட்டாளர்

# ரெட்டி இளைஞர் பேரவை

அலுவலக முகவரி : எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை – 600 083.
044 - 2485 3333, 96888 77700. E-mail Id : reddymalar06@gmail.com
Website : www.reddymalar.com, Twitter : @malar_reddy.twitter.com, website : www.reddymatrimony.co.in


## நிறுவனத்தலைவர் மடல்.....



**V.செல்வராஜு**
**நிறுவனத்தலைவர்**

**அ**ன்பு உறவுகள் அனைவருக்கும் பணிவான வணக்கங்கள்.

**அ**ன்பு கலந்த நெஞ்சங்களுக்கும், எனதருமை வாசகர்களுக்கும் தை திருநாளாம் பொங்கல் தின நல்வாழ்த்துகள். தை முதல் நாளில் இல்லங்களிலும், இதயங்களிலும் இன்பம் பொங்கி வழியட்டும். அல்லல்கள் நீங்கி மகிழ்ச்சி பெருகட்டும். அன்பு நிறைந்து அகங்கள் மகிழட்டும். குறைகள் மறைந்து குதூகலம் கூடட்டும். கவலைகள் நீங்கி களிப்பு பெருகட்டும், அநீதிகள் அகன்று நீதியே நிலைக்கட்டும், அகிலமே ஆனந்தத்தில் இனி மிதக்கட்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

**பூ**மியில் உயிரினம் தழைக்க தன் ஒளிக்கீற்றுகளால் வெப்பத்தைத் தந்தருளும் சூரிய கடவுளுக்கும், வேளாண் பெருமக்களுக்கும் காலம் காலமாய் உறுதுணையாய் இருக்கும் கால்நடைகளுக்கும் நன்றி வழிபாடு செய்யும் நன்னாள். நாட்டின் முதுகெலும்பான உழவர்களின் பொன்நாள். மக்கள் மனங்களை ஒருங்கிணைக்கும் உன்னதமான திருநாள். இந்நாள் நம் “ரெட்டி மலர்” இதழுக்கும், அதனை ஆதரிக்கும் வாசகர்களுக்கும் இடையேயுள்ள உறவை வலுப்படுத்தி, மேம்படுத்தி, மற்றுமொரு பரிணாமத்திற்குக் கொண்டு செல்ல இருக்கும் வரலாற்று நாள் என வாழ்த்துவோம்.

**க**டந்த ஆண்டின் இறுதியில் எதிர்பாராத மிக்ஜாம் புயலால் சென்னையில் ஏற்பட்ட பெருமழையும், தென்மாவட்டங்களில் ஏற்பட்ட அதீத மழையும் தமிழக மக்களுக்கு பெரும்வேதனையை தந்தது. இந்த துயர் துடைக்கும் பணியில் ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளை பாதிப்புக்குள்ளான மக்களுக்கு பேருதவியை செய்தது. அறக்கட்டளைக்காக உழைத்தவர்களை பாராட்டுவோம். அது அவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுக்கும்.

**தெ**ன்தமிழ்நாட்டில் வளிமண்ட மேலடுக்கு சுழற்சி காரணமாக ஏற்பட்ட அதீத மழைவெள்ளத்தால் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் ஆற்றங்கரையோரத்தில் வசித்து வந்த மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயினர். குடியிருப்புக்குள் நீர் புகுந்தது. சில இடங்களில் வீடுகள் இடிந்து விழுந்தது. களத்தில் நிலைமையை கேட்டறிந்த ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளை தன் பங்காக மக்களுக்கு தேவையான அத்தியாசிய தேவைகளை செய்துகொடுக்க முடிவெடுத்தது. அதன்படி மக்களுக்கு 35 டன் அரிசி உள்ளிட்ட மளிகைப்பொருட்களுடன் தென்மாவட்ட பகுதி மக்களுக்கு 3 நாட்கள் நிர்வாக அறங்காவலர் திரு.V.செல்வராஜ் அவர்கள் முன்னின்று வழங்க அவருடன் அறங்காவலர் திரு.C.செல்வராஜ், துறையூர் உத்தமர் ஓமந்தூரார் பேரவை நிர்வாகி திரு.S.காமராஜ், விளாத்திகுளம் ரெட்டி மகா ஜன சங்க தலைவர் திரு.P.ராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் நிர்வாகக்குழு உறுப்பினர்களுடன் திரு.R.V.செல்வகுமார், வேங்கை திரு.செ.சந்திரசேகர், மோனிகா திரு.சதீஷ் ரெட்டி, கோவில்பட்டி திரு.சந்திரா ரெட்டி, தூத்துக்குடி மாவட்டத்தலைவர் திரு.பெத்து ரெட்டி உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் இணைந்து வாழ்வாதாரம் கேள்விக்குறியான நிலையில் இருந்த மக்களை நேரில் சந்தித்து ஓ.பி.ஆர்.நினைவுத்தொண்டு அறக்கட்டளை 1000 ரூபாய் பெருமானமுள்ள நிவாரணப்பொருட்களை 3000 குடும்பங்களுக்கு வழங்கும் இப்பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்கண்டேயன் அவர்கள் தொடங்கி வைத்தார். சிறப்பாக செய்து முடித்தமைக்கு பாராட்டுகள்.

**க**டந்த 11.01.2024 அன்று TNPSC குரூப் 2 முதன்மைத் தேர்வுக்கான முடிவுகள் வெளியானது. இதில் நமது கே.ஆர்.டி. கேரியர் அகாடமியிலிருந்து 58 மாணவ, மாணவிகள் தொடர் பயிற்சி எடுத்துக் கொண்டனர். 30 மாணவர்கள் வெற்றிப் பெற்றதாக தேர்வு முடிவின்போது தெரியவந்துள்ளது. இதில் மூன்று மாணவர்கள் ரெட்டியார் சமூகத்தை சேர்ந்த மாணவர்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். “கே.ஆர்.டி. கேரியர் அகாடமி”யின் இந்த முயற்சி முதற்கட்டமே. இங்கு கே.ஆர்.டி. கேரியர் அகாடமி தன்னை முதன்மை பயிற்சி நிறுவனமாக நிலைநிறுத்திக் கொண்டது. இதன் மூலம் வெற்றியை உறுதி செய்யும் சிறந்த நிறுவனமாக மாறியுள்ளது. இதனை நம் சமூக இளைஞர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளும் வகையில் அடுத்தக்கட்டத்திற்கு முன்னேற்றம் அடைய உள்ளது என்பதனை மகிழ்வுடன் பகிர்கிறேன்.

**கே.**ஆர்.டி. கேரியர் அகாடமி மூலம் பயனடைந்தவர்கள் அரசுத்துறைகளில் சேர்ந்து அவர் தம் பணிகளில் வெற்றிப்பெற எங்கள் வாழ்த்துகள். தங்கள் வெற்றி மூலம் மற்ற இளைஞர்களுக்கு முன்மாதிரியாக திகழவும், தகுதி வாய்ந்த பிற இளைஞர்களுக்கு உதவவும் வேண்டுகிறோம். இதன் மூலமாகவே ஒருவர் மட்டும் பயனடையாமல், ஒருவர் வழி ஒருவராக பலரும் பயனடைந்து ரெட்டியார் சமுதாயமே வளமுடன் வாழ வழிப்பிறக்கும்.

**அ**டுத்த இதழில் சந்திப்போம். நன்றி.

என்றென்றும் சமுதாய உணர்வுடன்,
**V. செல்வராஜ்**

# உத்தமர் ஓமந்தூரார் வாழ்க்கைத்தொடர்

தொடர் – 19



வள்ளலார் புகழைப் பரப்ப வேண்டும் என்ற ஓமந்தூராரின் கனவை நனவாக்க எத்தனையோ எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைக்கொண்டு வள்ளலாரைப் பற்றி பலவகையான நூல்களை திரு.நா.மகாலிங்கம் வெளியிடச் செய்திருக்கிறார். பால்மணம் மாறாப்பச்சிளங் குழந்தைகள் மனத்திலும் வள்ளலாருடைய வாழ்க்கையும், கருத்துகளும் பதியுமாறு கண்ணுக்குக் குளிர்ச்சியான ஓவியங்கள் வழியாகக்கதை போல் அமைந்த "ஓவிய வரிசையில் வள்ளலார்" என்ற நூலை, இராமலிங்கம் நற்பணி மன்றத்தின் மூலம் திரு.நா.மகாலிங்கம் வெளியிட்டிருக்கிறார். பதி–னைந்து நிமிடங்களில் படித்து முடித்து விடக்கூடியது இந்த நூல். 'மலர்களின் வண்ணங்கள் வண்டுகளை வசீகரிப்பது போல' இந்த நூலில் உள்ள சித்திரங்கள் சிறுவர்களைக் கவர்ந்துள்ளன.

பெரியோர்களுக்கு தவத்திரு ஊரன் அடிகள் அவர்கள் மூலம் 'இராமலிங்க அடிகள் வரலாறு' என்ற நூலையும், திரு.அ.லெ.நடராஜன் அவர்கள் மூலம் 'வள்ளலார் வாழ்வும், வாக்கும்' என்ற நூலையும், திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா அவர்கள் மூலம் 'சத்திய ஞானசபை' என்ற நூலையும் திரு.நா.மகாலிங்கம் அவர்களை எழுதச் செய்து வெளியிட்டிருக்கிறார்கள்.

மாதமிருமுறை வெளிவரும் சத்திய கங்கை, சன்மார்க்க இயக்கத்தின் ஏடாக முழங்கி வருகிறது. வள்ளலாரைப் பற்றி அறிந்து கொள்ள எந்தத் தமிழனாவது ஆர்வமாக இருந்தால், அவருக்குத் தேவையான நூல்கள் இப்போதும் தங்கு தடையின்றி கிடைக்கின்றன.

இக்காலத்து மக்களுக்குப்புரியும்படி "திருஅருட்பா"வுக்கு உரை தேவை என்று ஓமந்தூரார் நினைத்தார். திருப்பராய்த்துறையில் "கடவுள் பணியும் கல்விப்பணியும்" புரிந்து வரும் சுவாமி சித்பவானந்தா அவர்களைத் திருவருட்பாவுக்கு உரை எழுதும்படி ஓ.பி.ஆர். கேட்டுக்கொண்டார்.

ஓ.பி.ஆரின் அந்த வேண்டுகோளுக்குச் சுவாமி சித்பவானந்தா இணங்கவில்லை.

ஓ.பி.ஆரின் இந்த கனவையும் திரு.நா.மகாலிங்கம் நிறைவேற்றியுள்ளார். சித்தாந்த கலாநிதி உரைவேந்தர் அவ்வை துரைசாமிப்பிள்ளை அவர்களை, சன்மார்க்கத்தலைவர் திரு.நா.மகாலிங்கம் அவர்கள் வள்ளலார் அருளிய திருஅருட்பா ஆறாயிரம் பாடல்களுக்கும் உரை எழுதச் சொன்னார்.

திரு உரைவேந்தர் அவ்வை துரைசாமிப்பிள்ளை அவர்கள் ஏழு ஆண்டுகள் இந்தப்பணியில் ஈடுபட்டு திருஅருட்பா முழுவதற்கும் உரை எழுதியிருக்கிறார்.

திருஅருட்பா உரை எழுதுவதற்காக உரைவேந்தர் அவர்களுக்கு மாதந்தோறும் சன்மானமாகவும், பேப்பர், டைப் அடித்தல், உதவிக்கு ஆள் முதலியவைகளுக்காகவும் திரு.நா.மகாலிங்கம் சக்தி தர்ம நிறுவனம் மூலம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டுள்ளார்.

இப்படித் தயாரான இந்த உரை விளக்கத்தட்டச்சு படிவங்களை திரு.நா.மகாலிங்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணைவேந்தர் டாக்டர்.ராஜா.சர்.முத்தையா செட்டியார் அவர்களுக்கு வழங்கினார். அப்பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழுவினர் திரு.நா.மகாலிங்கம் அவர்களுக்கு நன்றி தெரிவித்திருப்பதோடு இந்த உரையை அச்சிட்டு பத்துப்பகுதிகளாகக்கொண்டு வருவது என்று முடிவு செய்து, வெளியீட்டுச் செலவுக்காக, ஐந்து லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

வள்ளலார், தன்னைச்சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை என்றே கூறிக்கொண்டார். அந்தச் சிதம்பரத்திலுள்ள ஒரு பல்கலைக்கழகம் அவருடைய அருட்பா உரையை வெளியிடுவது எல்லா வகையிலும் பொருத்தமாகும்.

தமிழர் அல்லாதவர்கள், வள்ளலாரைப் பற்றி அறிந்து கொள்ள உதவியாக 1. மதுரை தியாகராசர் கல்லூரி முதல்வர் டாக்டர்.சுப.அண்ணாமலை 2.ஆந்திரப்பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர்.கே.ஆர்.சீனிவாச ஐயங்கார், 3.புகழ் பெற்ற எழுத்தாளர் ஜீ.வி.பிள்ளை ஆகியோரை வள்ளலாரைப்பற்றிச் சிறந்த நூல்களை ஆங்கிலத்தில் எழுதச் செய்த பெருமையும் திரு.நா.மகாலிங்கம் அவர்களுக்கே உரியது. இந்த நூல்கள் பம்பாய் பாரதீய வித்யாபவன் வாயிலாக வெளியிடப்பட்டு உலகமெங்கும் பரவியிருக்கின்றன.

## பல்கலைக்கழகத்தில் வள்ளலார்

மதுரைப்பல்கலைக்கழகத்தில் காந்தி நூற்றாண்டு விழா ஆண்டில் திரு.நா.மகாலிங்கம் அவர்கள் வழங்கிய நன்கொடையைக் கொண்டு "காந்தியக் கல்வியும் இராமலிங்கம் தத்துவங்களும்" என்ற ஒரு துறை தொடங்கப்பெற்றது.

இந்தத்துறையினர், கருத்தரங்குகளையும், ஆராய்ச்சி கூட்டங்களையும் இப்பல்கலைக்கழகத்தின் பல பகுதிகளிலும் 1973 முதல் நடத்தி வருகின்றனர். இவற்றில் படிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை நூலாக வெளியிடவும் ஏற்பாடு நடைபெற்று வந்தது.

இத்துறையின் இயக்குநர் டாக்டர் எம்.பி.குருசாமி எழுதியுள்ள "வள்ளலார் ஓர் அறிமுகம்" என்ற நூல் வெளிவந்துள்ளது. 'வள்ளலாரின் கருணை உள்ளம்' என்ற தலைப்பில் செய்த ஆராய்ச்சி முற்றுப்பெற்றுள்ளது.

## சென்னையில் வள்ளலார் விழா

வள்ளலார் முதற்சொற்பொழிவு நிகழ்த்தியது சென்னையில் தான். அவர் இளமையில் பல ஆண்டுகள் வாழ்ந்ததும் சென்னையில் தான். எனினும் 'தர்மமிகு' சென்னை என்று அவர் போற்றிய நகரம் அவரை இப்போதும் நினைத்து வருகிறது என்றால் அந்தப்பெருமையில் நூற்றுக்கு நூறு பங்கு திரு.நா.மகாலிங்கத்துக்கே உரியது.

## ஹேமசித்து

தங்கம் செய்வது [ஹேமசித்து] இறையருள் பெறுவதற்கான முதல்படி என்று ஒரு நம்பிக்கை உண்டு. அதனால் ஓ.பி.ஆருக்கு தங்கம் செய்து பார்க்கவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது.

ஓர் இலைத்தாமரையை அடிப்படை உலோகத்தின் மீது வைத்து 108 வராட்டியைப் பயன்படுத்திப் புடம் போட்டால் தங்கமாக ஆகிவிடும் என்று ஒரு நூலில்

படித்திருந்தார். ரூபாய் ஆயிரம் கொடுத்து கொடைக்கானலில் இருந்து அந்த அரிய இலையை வரவழைத்திருந்தார்.

அதை டாக்டர் சீனிவாசனிடம் காட்டி, 'இது என்ன' என்றார். டாக்டர். சீனிவாசன் 'தெரியாது' என்றார். 'இது தெரியாமல் என்ன ஐயா நீர் ஒரு பல்கலைக்கழகத்தில் தாவர இயல் பேராசிரியராக இருக்கிறீர்? ஓர் இலைத்தாமரை என்று கேள்விப் பட்டிருக்கிறீரா? ஆம் கேள்விப்பட்டிருக்கிறேன். Actinopteris என்று தாவர இயலில் சொல்லுவோம். பார்த்ததில்லையா? இதை வைத்துக்கொண்டு தங்கம் செய்யலாம் பாருங்கள்' என்றார். ஓ.பி.ஆர் ஒரு புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு இருந்தார். டாக்டர்.சீனிவாசன் அந்தப்புத்தகத்தை வாங்கி முதலில் இது ஓர் இலைத்தாமரை என்பதை உறுதியாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தப் புத்தகத்தை பாருங்கள் என்றார்.

சித்திரை மாதத்தில் பகல் 12 மணி வெயிலில் காலில் வைத்து மிதித்து ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தால் சூரியனுக்குப் பக்கத்தில் நட்சத்திரம் தெரிந்தால், அது ஓர் இலைத்தாமரை" என்று அந்நூலில் சொல்லப்பட்டிருந்தது. அப்படியே நெடுநேரம் இருவரும் பார்த்தார்கள். ஒன்றும் தெரியவில்லை. எதையோ பிடுங்கிவைத்து ஓர் இலைத்தாமரை என்று சொல்லி ஏமாற்றப்பட்டதை ஓமந்தூரார் உணர்ந்தார். அவருக்கு இவ்வாறு எல்லா வகையான ஆராய்ச்சிகளிலும் ஆர்வம் இருந்தது.

## 1950ல் குடமுழுக்கு

திருமுருக கிருபானந்தவாரியர் வடலூர் சத்யஞான சபை திருப்பணி செய்வதில் ஈடுபட்டு பல ஆண்டு களுக்குப் பிறகு அதை 1950ல் முடித்தார். திருப்பணி செய்யப்பட்ட சத்யஞான சபையைத்திறந்து வைக்கும் படி வாரியார் சுவாமிகள் மூதறிஞர் இராஜாஜி அவர்களைக் கேட்டுக்கொண்டார். இந்தத்திறப்பு விழாவை நடத்த ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தான் பொருத்தமானவர். அவரையே அழைக்கலாம் என்று இராஜாஜி கூறிவிட்டார்.

அதற்கிடையே சத்யஞான சபை கலசத்தில் தண்ணீர் ஊற்றக்கூடாது. அப்படி ஊற்றினால் அது சடங்காகி விடும். எந்த விதமான மந்திரத்தையும் சொல்லக்கூடாது. அதுவும் சன்மார்க்கத்துக்கு விரோதம் என்று சிலர் கிளர்ச்சி செய்தனர்.

அப்போது இந்து சமய அறநிலையத் துறை ஆணை யாளராக இருந்த திரு.டி.எம்.சின்னையாபிள்ளை வடலூரில் கும்பாபிஷேகம் செய்யலாம் என்று வாய்மொழியாகக்கூறிவிட்டு எழுத்தில் அதற்கு நேர்மாறான ஆணை பிறப்பித்து அனுப்பிவிட்டார். வாரியார் சுவாமிகளுக்கு என்ன செய்வது என்று ஒருகணம் கவலை ஏற்பட்டது. உடனே அந்த ஆணையை எடுத்துக்கொண்டு திருவண்ணாமலைக்குச்சென்றார். அங்கே இரமண ஆசிரமத்திலிருந்து ஓ.பி.ஆரிடம் அதைக் காட்டினார்.

வாரியார் சுவாமிகள் சொல்லுகிறார்கள், 'ஆணையைப் படித்துப்பார்த்ததும் ஓ.பி.ஆர் துடித்தார். அந்த நிமிஷமே திரு.வி.என்.தியாகராஜன் முதலியார். அறநிலையத்துறை அமைச்சர் டாக்டர் டி.எஸ்.எஸ். இராஜன் ஆகிய இருவருக்கும் கடிதங்கள் எழுதி என்னிடம் தந்தார்', அந்தக் கடிதங்களின் பயனாக குடமுழுக்கு விழா நடத்த ஆணை கிடைத்தது.

## கோவை—பொள்ளாட்சி நிகழ்ச்சிகள்

கோயமுத்தூரில் திரு.வி.சி.சுப்பையாகவுண்டர் ஆரம்பித்த கோவை சன்மார்க்க நிலையத்தில் நடந்த மாநில சன்மார்க்க மாநாட்டிற்கு ஓமந்தூரார் சென்றிருந்தார். இதைத் தொடர்ந்து கோவையில் நடைபெற்ற விவேகானந்தர் நூற்றாண்டு விழாவிலும் ஓ.பி.ஆர் கலந்துக்கொண்டார். இந்த இரு நிகழ்ச்சி களாலும், திரு.நா.மகாலிங்கத்துக்கும், ஓமந்தூராருக்கும் ஏற்கெனவே இருந்த தொடர்பு மேலும் உறுதிப்பட்டது.

சன்மார்க்க சங்கங்களில் மாகாண மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்ற எண்ணமும் கோவையில் தான் உதித்தது.

## கனவும் நனவும்

1950ல் ஓமந்தூர் பண்ணையில் ஓ.பி.ஆர் இருந்த போது ஒரு கனவு கண்டார். வடலூரிலுள்ள திரு.வாகீசம் பிள்ளையின் மனையில் மாடியில் நின்று ஒளியைக் காண்பதாக, அக்கனவு அமைந்தது. எனவே வள்ளலார் புகழைப் பரப்புவதும் அதற்காக வடலூரிலேயே போய் இருப்பதும் தம் கடமை என்று உறுதி கொண்டார்".

## வடலூர் வருகை

1951இல் ஓமந்தூரார் வடலூருக்கு வந்து அதுமுதல் அவ்வூரையே தம் வாழ்நாள் இறுதிவரை தம் இருப்பிடமாகக்கொண்டார். 7 அல்லது 8 ஆண்டுகள் திரு.வாகீசம்பிள்ளையின் வீட்டிலேயே தங்கியிருந்தார்.

## திரு.கிரிதாரி பிரசாத்

அருட்பா அரசு திரு.கிரிதாரிபிரசாத் அவர்களுக்கும் ஓமந்தூராருக்கும், ஓமந்தூரார் வடலூருக்கு வந்த பிறகு நெருங்கிய நட்பு ஏற்பட்டது.

## அலைகடலுக்கு அப்பால்

அருட்பா அரசு கிரிதாரி பிரசாத், மலேசிய சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, இராமகிருஷ்ணரின் இயக்கம் போல இராமலிங்கரின் இயக்கமும், உலகம் தழுவியதாக அமையவேண்டும் என்ற ஆசையை ஓமந்தூரார் தெரிவித்தார்.

திரு.நா.மகாலிங்கம் இராமலிங்கம் பணி மன்றத்தின் தலைவர் என்ற முறையில் இசையோடு பாடக்கூடியவரும், தமிழ் பேராசிரியருமான டாக்டர்.சு.பாலச்சந்திரன் எம்.ஏ. எம்.லிட். பி.எச்.டி என்பவரை இலங்கைக்கு அனுப்பி அருட்பா முரசு கொட்டுமாறு ஆட்படுத்தினார். இதன் விளைவாக பின்னர் இவர் அமெரிக்காவுக்கு யுனெஸ்கோ ஆராய்ச் சி யாளராகச்சென்ற போது, அங்கும் தாம் சந்தித்த பெருமக்களிடம் தமிழகத்து மண்ணில் எழுந்த திரு—வருட்பா தத்துவத்தை விளக்கினார் என்ற செய்தியை "அயல்நாடுகளில் என் அனுபவங்கள்" என்ற இவர் நூலிலிருந்து அறிகிறோம்.

அமெரிக்காவில் ஆசிரமம் அமைத்து அந்த நாட்டில் பல்வேறு பகுதிகளில் அதன் கிளைகளையும் ஏற்படுத்தி, பெருஞ்செல்வாக்குடன் விளங்கும் சுவாமி சச்சிதானந்தர் மூலமாக திரு.நா.மகாலிங்கம் அந்த நாட்டில் வள்ளலார் உருவச்சிலையை நிலைநாட்டவும், ஜோதி வழிப்பாட்டைப்பரப்பவும் ஆவன செய்தார்.

1977இல் திரு.நா.மகாலிங்கமும், அருட்பா அரசு திரு.கிரிதரிபிரசாத்தும் அமெரிக்கா சென்று வள்ளலார் புகழைப் பரப்பியுள்ளனர்.

## வடலூர் பணி
### நான்கு கட்டங்கள்

ஓ.பி.ஆர் 1895இல் பிறந்தார். 1970ல் இறந்தார். இந்த இரண்டு ஆண்டுகளையும் சேர்த்துக்கொண்டால் இவருடைய வாழ்க்கைக்காலம் 76 ஆண்டுகள் ஆகும். இக்காலப்பகுதியை ஒவ்வொன்றும் 19 ஆண்டுகள் அடங்கிய நான்கு கட்டங்களாகப் பிரித்துக் கொள்ளலாம்.

### முதல் கட்டம்

1895 முதல் 1913 வரை உள்ள 19 ஆண்டுகள் ஓ.பி.ஆரின் இளமைக்காலம். தந்தையார் இறந்ததால், தாயார் சொல்லுக்குக்கட்டுப்பட்டு, இவர் (1) படிப்பை நிறுத்திக்கொண்டார். (2) சிறுவயதில் திருமணம் செய்துக்கொண்டார். (3) குடும்பச்சொத்துக்களைக் கவனிக்கும் பொறுப்பை ஏற்றார்.

### இரண்டாவது கட்டம்

1914 முதல் 1932 வரை அமைந்த 12 ஆண்டுகள் ஓ.பி.ஆரின் வாழ்க்கையின் சோதனைக்காலம் எனலாம். மனைவியை இழந்து பொதுப்பணிகளில் ஈடுபட்ட காலம் இதுவே.

சாதாரணமாக மனைவியை இழப்பவர்கள் மறுமணம் செய்து கொள்வர் அல்லது தம் இல்லத்திலேயே இருந்து கொண்டு துறவி போல வாழ்வர். ஓ.பி.ஆர் இருநிலைகளினின்றும் மாறுபட்டு, தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இல்லத்தை விட்டு வெளியேறி, ஆசிரமம் அமைத்துக்கொண்டார். தரிசாக இருந்த நிலங்களில் புன்செய் தானியங் களையும், பழத்தோட்டங்களையும் உண்டாக்கி ஒவ்வொரு மாதமும் ஈட்டிய இரண்டாயிரம் ரூபாய் வருமானத்தை, தூய வாழ்க்கைக்கழகங்கள் அமைக்கவும் கதர்ப்பிரசாரத்துக்கும், அரசியல் மாநாடு கள் நடத்தவும் காந்தியடிகளின் நிர்மாணக் கொள்கைளைப்பரப்பவும் செலவிட்டார்.

### மூன்றாவது கட்டம்

இரண்டாவது கட்டத்தில் ஓ.பி.ஆர் இன்னார் என்பதை இனம் கண்டு கொண்ட ஆங்கிலேய அரசு பின்னர் இவரை நான்கு முறை சிறையில் அடைத்தது. மூன்றாவது கட்டமான 19 ஆண்டுகளில் (1933 – 1951) சிறை வாழ்க்கையையும் அதன் விளைவு களையும் அனுபவித்தார். சிறையிலிருந்து ஒவ்வொரு தடவையும் விடுதலை பெற்றதும் இவருடைய கொள்கைகள் உறுதிப்பெற்றன. மக்கள் உள்ளங்களில் இவர் நிலைத்த இடம் பெற்றார். இதனால் மாவட்டக்கழகமும் நகராண்மைக் கழகமும் இவர் சொற்படி நடந்தன.

தமிழ்நாடு மாகாண காங்கிரசின் தலைவர், சென்னைச்சட்டசபை மேலவை உறுப்பினர் பதவி களை வகித்து, முதலமைச்சரும் ஆனார். இக்காலமே இவருடைய வாழ்க்கையில் புகழ் ஏணிக்காலம். எனினும் மக்கள் இவர் ஆற்றிய பெரும் பணிகளை உணரவில்லை. அதற்குத்தேவையான விளம்பரத்தை இவர் செய்து கொள்ளவில்லை. இவர் முதலமைச் சராக இருந்தார் என்பது கூடத் தமிழ் மக்கள் பலருக்குத் தெரியாது. காரணம் சிலைகள், விழாக்கள் முதலிய ஆரவாரங்களில் மக்கள் மயங்கி விடுகிறார்கள். பொதுமக்களின் நினைவு ஆற்றல் மிகக் குறுகியது. நேற்றும் சென்ற மாதமும் நடந்தவை தான் அவர்களுக்கு நினைவு இருக்கும் என்ற கூற்று ஓ.பி.ஆரைப் பொறுத்தவரை உண்மையாகவே உள்ளது.

### நான்காவது கட்டம்

ஓ.பி.ஆரின் வாழ்க்கையின் இறுதிக் கட்டமான 19 ஆண்டுகள் (1951ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து அவர் உயிர் நீத்தவரை) வடலூரில் கழிந்தன. அது அவருடைய முதிர்ந்த காலம் (இலையுதிர்காலம் என்று சொல்லுவாரும் உள்ளனர்). இக்காலத்தில் அவர் ஆற்றிய பணியே அவர் புகழ் என்றென்றும் நின்று நிலவச்செய்கிறது.

### வடலூர் வாழ்க்கை

ஓமந்தூரார் எத்தகைய சூழ்நிலையில் வடலூருக்கு வந்தார். அவருடைய குறிக்கோள்கள் என்ன? அவர் வருவதற்கு முன் வடலூர் எவ்வாறு இருந்தது? அவர் வந்தபின் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன? அவரே நிறுவிய நிறுவனங்கள் யாவை? அவற்றை நடத்த அவர்பட்ட துயரங்கள் எத்தகையவை? அவர் கையாண்ட கொள்கைகள் என்ன? அவர் முயற்சி யால் வடலூரில் ஏற்பட்ட ஏனைய வளர்ச்சிகள் என்னென்ன? இன்னும் நிறைவேற வேண்டிய அவருடைய கனவுகள் எவையெவை? என்பவற்றை இக்கட்டுரையில் தெளிவுபடுத்துவோம்.

### ஓமந்தூரார் வருகை

திரு.வி.க எழுதிய மனித வாழ்க்கையும் காந்தி அடிகளும் என்ற நூலில் வள்ளலாரைப் பற்றிய குறிப்பைப் படித்தபோது ஓ.பி.ஆருக்கு வள்ளலாரிடம் ஈடுபாடு ஏற்பட்டது. அந்த ஈடுபாடு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அவர் உள்ளத்தில் வளர்ந்து வந்தது. 1930இல் முதல் தடவையாக அவர் வடலூருக்கு வந்தார் என்று அவருடைய நண்பர்கள் கூறுகின்றனர். 1937இல் தாம் தென்னார்க்காடு மாவட்டத்தின் போலீஸ் துறைத் தலைவராக இருந்தபோது ஓ.பி.ஆருக்கு வள்ளலாரிடம் ஈடுபாடு இருந்ததைக்கண்டதாகத் திரு.பார்த்தசாரதி அய்யங்கார் தெரிவிக்கின்றார்.

1949இல் பதவியை விட்டு விலகியதும் ஓ.பி.ஆர் ஓமந்தூருக்குப் போனார். குடும்பச் சொத்துக்களைத் தம்பி திரு.ஓ.எம்.லெட்சுமிநாராயணரெட்டியார் நிர்வகித்த முறை இவருக்குப் பிடிக்கவில்லை. இரு–வரும் பல துறைகளில் தென்துருவமும் வட துருவமுமாக இருந்தனர். பாகப்பிரிவினை வழக்கு நடந்து, திண்டிவனம் வெங்கடசுப்பாரெட்டியார் 'ரிசீவர்' ஆக நியமிக்கப்பெற்றார். அப்போதே வடலூரில் சில நிலங்களை வாங்கி ஒரு கிணறும் வெட்டினார்.

இக்காலத்தில் ஓமந்தூரார் இரமண ஆசிரமத்தில் தங்கிவந்தார். அப்போது அங்கு பகவான் இரமணருடைய சகோதரர் சர்வாதிகாரியாக நியமிக்க பெற்றார். ஒரு பொது ஸ்தாபனத்தில் சர்வாதிகாரியாக யாரும் இருக்கக்கூடாது என்று கருதி ஓ.பி.ஆர். அங்கிருந்து விடைபெற்றார். வேறு ஒரு கூட்டைத் தம் புகலிடமாகத் தேடிக் கொண்டிருந்தார்.

கிருபானந்த வாரியார் சுவாமிகள், சத்திய ஞான சபைத் திருப்பணியைச்செய்து முடித்தபோது அவ்விழா விற்காக ஓமந்தூரார் பல நாட்கள் தங்கினார். அப்போது தான் குருகுலம் ஆரம்பிப்பது என்ற முடிவுக்கு வந்தார். வள்ளலார் வாழ்ந்த வடலூரில் சான்றோர் பலரும் வாழவேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

இன்னும் வளரும்.......

**தொகுத்தவர் வீ.செல்வராஜு**

ஆதாரம் : ஆர்.பி.சங்கரன் எழுதிய நூலிலிருந்து

சென்னை ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை சார்பில்

# தமிழக தென்மாவட்டங்களில் வெள்ள நிவாரணப்பணிகள்




தென்மாவட்டங்களில் சமீபத்தில் பெய்த அதீத கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.30 லட்சம் மதிப்பிலான 20 பொருட்கள் அடங்கிய மளிகை மற்றும் இதர பொருட்கள் தொகுப்பினை 3,000 குடும்பங்களுக்கு சென்னை ஜாபர்கான் பேட்டையில் இயங்கிவரும் ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் சார்பில் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டு வழங்கப்பட்டது.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு.V.செல்வராஜு அவர்கள் தலைமையில் இதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு அறக்கட்டளை நிர்வாகம் முழு ஒப்புதல் வழங்கியது. இந்த முடிவினை செயல்படுத்தும் விதமாக அவர் நிவாரணப் பொருட்களை விநியோகிக்கும் பணிகளுக்கான தொடக்கப்பணிகளை துறையூர் உத்தமர் ஓமந்தூரார் பேரவை நிர்வாகிகள் திரு.S.காமராஜ், சிட்டி திரு.R.கண்ணன், திரு.N.வித்யாசங்கர் ஆகியோருடன் இணைந்து இப்பணியினை சிறப்பாக செய்து முடித்தார்.

துறையூர் நகர ரெட்டி நலச்சங்கம், துறையூர் தாலுகா ரெட்டி நலச்சங்கம், ரெட்டி இளைஞர் பேரவை, துறையூர் மகளிர் அணி மற்றும் துறையூர் நகர மருத்துவர்கள் சார்பில் டாக்டர்.K.பிரபாகர் உள்ளிட்டோர் இப்பணியில் தங்களை ஈடுபடுத்தி கொண்டு பணியினை சிறப்பாக செய்துமுடித்தனர். டாக்டர்கள் குழு குழந்தைகள் மற்றும் மகளிருக்கான சுகாதார மருத்துவப்பொருட்களை அளித்தனர். பலரும் நிதியுதவியும் செய்தனர்.



முதற்கட்டமாக நிவாரணப்பொருட்களை திருச்சி மாவட்டம் துறையூரில் உள்ள பிரசன்ன மஹாலில் சேகரித்து, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தனித்தனியே 5 கிலோ அரிசி, சக்தி மசாலா தயாரிப்பில் உருவான மஞ்சள் தூள், தனியா தூள், மிளகாய் தூள், சாம்பார் பொடி, உப்பு, ரவை, துவரம் பருப்பு, சீரகம், மிளகு, வெந்தயம், கசகசா, சோம்பு உள்ளிட்ட அத்தியாவசிய மளிகைப்பொருட்கள், மசாலாப் பொருட்கள் மற்றும் சோப்பு, பாய், போர்வை, பெண்களுக்கான நாப்கின், புடவை, பேண்ட், டி–ஷர்ட் உள்ளிட்ட நிவாரணப்பொருட்கள் பேக்கிங் செய்யும் பணி நடைபெற்றது. இதற்கு பல்வேறு பகுதி களிலிருந்தும் நன்கொடையாளர்கள் பணமாகவும், பொருளாகவும் வழங்கி இப்பணியில் தம்மை முழுமையாக இணைத்துக்கொண்டனர். இது நம் ரெட்டியார் சமூகத்திற்கு பெருமையைத் தேடி தந்தது.



**நிவாரணப் பைகள் தயாரிப்பு :**

மேற்கண்ட நிவாரணப்பொருட்கள் அடங்கிய 3,000 பைகளை பேக்கிங் செய்வதற்கு துறையூர் பிரசன்ன மஹால் உரிமையாளர் ஜமீன்தார் திரு.பாலவெங்கடாசலப்பதிதுரை அவர்கள் வாடகை ஏதுமின்றி இலவசமாக இடத்தை வழங்கினார். அதற்காக ஓ.பி.ஆர் அறக்கட்டளை சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.



இப்பணியில் துறையூர் நகர ரெட்டி நல சங்கத் தலைவர் திரு.S.கருணாகரன், செயலாளர் திரு.K.தியாகராஜன், பொருளாளர் திரு.D.சிவக்குமார், துணைத் தலைவர் திரு.P.ராஜ்மோகன், முன்னாள் தலைவர்கள் திரு.T.நடராஜன், திரு.R.ராஜாராம், திரு.ஜோதி எலக்ட்ரிகல்ஸ் ரவி, போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர் திரு.M.மிதுன்பாலாஜி, தேவி கம்யூனிகேஷன் உரிமையாளர்கள் திரு.S.கோவிந்தராஜ் & திரு.முரளி, ஓய்வுப்பெற்ற ஆசிரியர் திரு.V.வேணுகோபால், துணைத்தலைவர் திரு.P.சுப்புரெட்டி, வாஞ்சி அச்சக உரிமையாளர் திரு.R.தொல்காப்பியன், மணிகண்டன் ஆட்டோ மொபைல்ஸ் உரிமையாளர் திரு.R.பவன், சித்திரைப்பட்டி திரு.R.தீபன், துறையூர் மகளிர் அணி தலைவி திருமதி.V.உமாமகேஸ்வரி, செயலாளர் திருமதி.C.விஜயா, பொருளாளர் திருமதி.R.பாரதி, துறையூர் இளைஞர் அணி செயலாளர் திரு.J.தீபக், மேலாளர் திரு.D.ராதாகிருஷ்ணன், நாமக்கல் நகரச் செயலாளர் திரு.இரா.அன்பழகன், முசிறி தாலுகா சங்கத்தலைவரும், ரம்யா கேட்டரிங் உரிமையாளரு–மான திரு.கார்த்திக் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் தாலுகா ரெட்டி நலச்சங்க நிர்வாகிகள் பலரும் இப்பணியினை 25.12.2023 மற்றும் 26.12.2023 ஆகிய இரண்டு நாட்களும் இரவு பகலாக ஓய்வின்றி முழு நேரமாக இருந்து பேக்கிங் பணியினை செய்து முடித்தனர்.

இந்த வெள்ள நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு எடுத்துச்செல்ல மாரியம்மன் & கோ என்ற பெயர் கொண்ட TN 48 AW 2457 எண் உள்ள 12 சக்கர லாரியினை அதன் உரிமையாளர் சித்திரப்பட்டி திரு.S.முரளி அவர்கள் மூன்று நாட்களுக்கு இலவசமாக வழங்கினார். அதற்கான வாகன எரிபொருள் செலவினை ஸ்ரீ விநாயகா பெட்ரோல் பங்க் உரிமையாளர்கள் திரு.N.வித்யாசங்கர், திரு.N.பிரபு சகோதரர்கள் ஏற்றுக்கொண்டு




நிவாரணப்பொருட்கள் அடங்கிய வாகனத்தை தென் மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளில் விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத் தலைவர், செயலாளர், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், சாத்தூர், கோவில்பட்டி உள்ளிட்ட சுற்று வட்டார ரெட்டி நலச்சங்க நிர்வாகிகள், தன்னார்வலர்கள் என பலரும் இந்த வெள்ள நிவாரணப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிறப்பு சேர்த்தனர்.

**பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடல் :**

ஓ.பி.ஆர் நினைவுத்தொண்டு அறங்கட்டளை நிறுவனர் திரு.V.செல்வராஜு, அறங்காவலர் திரு.C.செல்வராஜ் ஆகியோர் தலைமையில் நிவாரணக்குழுவினர் தாமிரபரணி ஆற்றுப்படுகை பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலில் பார்வையிட்டனர். நிவாரணக் குழுவினரை விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்





தலைவர் திரு.P.ராமகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் வரவேற்று வழிநடத்தி பார்வை யிடவும், விநியோகிக்கவும் மூன்று நாட்களும் உறுதுணையாக இருந்தனர்.

தாமிரபரணி ஆற்றுப்படுகை பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. தென் தமிழக மாவட்டங்களான தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில் குறிப்பாக, விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட கீழஈரால், தூத்துக்குடி நகரம், வீரநாயக்கன்தட்டு முத்தையாபுரம், ஸ்ரீவைகுண்டம் தாலுகாவை சேர்ந்த ஏரல் பத்ரகாளியம்மன் கோயில் தெரு, நாடார் இரண்டாவது தெரு, முக்காணி, உமரிக்காடு, வாழல்லான், அதன் கடைமடை பகுதியான ஆத்தூர்



புன்னைக்காயல், பழைய காயல் ஊர்கள் நீரில் மூழ்கி தனித்தீவுகளாக காட்சியளித்தன. நகரின் தொழில் செய்த பகுதிகளில், வர்த்தக நிறுவனங்கள், கடைகள் நீரில் மூழ்கடிக்கப்பட்டிருந்தன. பல கோடி மதிப்புள்ள அவர்களது விற்பனைப்பொருட்கள் நாசமாகி பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியிருந்தது. இந்த பாதிப்புகள் விவசாயிகள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதாரத்தையும் சிதைத்திருந்தது. மக்கள் ஒரு வாரமாக வெளியே செல்ல முடியாமல், சாப்பாட்டிற்கே வழியின்றி பட்டினியோடு தவித்தனர். பல கிராமங்களில் ஆடு, மாடு, கோழி என வளர்ப்பு பிராணிகள் பலவும் வெள்ள நீரில் அடித்துச்செல்லப்பட்டது. வயலில் பயிரிடப்பட்ட பயிர்களும் வெள்ளநீரில் அடித்துச் செல்லப்பட்டு வயல்கள் எல்லாம் மண் மேடாகி விவசாயிகளின் வாழ்வாதாரம் அடிவாங்கியிருந்தது. பல கிணறுகள் சேற்றால் நிரம்பி மேடுகளாகி யிருந்தன. நீரிறைக்கும் பம்பு செட்டுகள் நீரில் மூழ்கி சேதமடைந்திருந்தன. வீடுகளும், கட்டடங்களும் நீரினால் சூழப்பட்டு ஆறடி, ஏழடி தண்ணீர் கரை–புரண்டு ஓடிய பல அடையாளங்களை கிராமங்களில் காணமுடிந்தது.

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட சோட்டையன்தோப்பு, முத்துநகர் பகுதி, ஊரணி ஒத்தவீடு, உடன்குடி தாலுகா பகுதிகளான அரசல்பேட்டை, வெள்ளாளன்விளை, வட்டன்விளை, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உட்பட்ட ரெட்டியார்பட்டி, சிந்தாமணி, முனஞ்சிப்பட்டி, சிவந்திபட்டி, மூலக்கரைப்பட்டி பகுதிகளில் கடந்த 27.12.2023, 28.12.2023 மற்றும் 29.12.2023 ஆகிய தேதிகளில் வெள்ள நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கும் பகுதிக்கு வந்தடைந்தது. இப்பணியினை திரு.S.காமராஜ் அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

**நிவாரணப்பொருட்கள் விநியோக நிகழ்ச்சிகள் :**

வெள்ள நிவாரணப்பொருட்கள் விநியோகிக்கும் நிகழ்ச்சியினை சிறப்பாக செயல்படுத்துவதற்கு விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தின் தலைவர் திரு.P.இராமகிருஷ்ணன் அவர்களை தொடர்புக் கொண்டு உதவிடுமாறு அறக்கட்டளையின் சார்பில் கேட்டிருந்தோம். அதன்படி முழு மனநிறைவோடு அவர்களும், சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர் களும் இந்த மனிதநேய நிகழ்ச்சியினை மிகச் சிறப்பாக நடத்துவதற்கு உதவுவதாக தெரிவித்ததோடு மூன்று நாள் நிகழ்ச்சியிலும் ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளை நிர்வாகிகளோடு இணைந்து சிறப்பாக செயல்பட்டனர். இந்தப்பணியில் ஈடுபட்ட 35-க்கும் மேற்பட்ட நிவாரணப்பணி குழு



உறுப்பினர்களுக்கு தங்குவதற்கு விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்திற்கு பாத்தியப்பட்ட திருசெந்தூர் மடத்தில் இடவசதி செய்து தந்தனர். மேலும், மூன்று நேரமும் உணவும், பகுதிவாரியாக விநியோகம் செய்ய வாகன வசதியும் செய்து தந்தனர். அதற்காக ஓ.பி.ஆர் அறக்கட்டளை சார்பில் விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தின் தலைவர் திரு.P.இராமகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.



**முதல் நாள் நிகழ்ச்சியினை** 27.12.2023 அன்று விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் திரு.G.V.மார்கண்டேயன் MLA, அவர்கள் பல்வேறு பணிகளுக்கு இடையே தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பகுதிக்குட்பட்ட கீழஈரால் கிராமத்தில் நிவாரணப்பொருட்கள் வந்தடைந்ததை பார்வையிட்டு பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார். நிவாரணப்பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியினை



தொடங்கிவைத்தார். அதுசமயம், தன்னார்வலர் களுடன் வருகை தந்த விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்கத்தலைவர் திரு.P.ராமகிருஷ்ணன், செயலாளர் திரு.A.கிருஷ்ணசாமி, பொருளாளர் திரு.R.லட்சுமண பெருமாள் மற்றும் திரு.V.செல்வராஜு, அறங்காவலர் திரு.C.செல்வராஜ் ஆகியோர் விநியோக நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்தனர். இதில் சங்கத் துணைத் தலைவர் திரு.ஜெயராமன் ரெட்டியார், திரு.முருகபூபதி, நிர்வாகக்குழு உறுப்பினர் வேங்கை திரு.சந்திரசேகர், கோவில்பட்டி திரு.கந்தசாமி, திரு.சுப்பையா, துறையூர் தாலுகா முன்னாள் நகரத் தலைவர் திரு.ஜோதிரவி, உத்தமர் ஓமந்தூரார் பேரவை நிர்வாகிகள் திரு.S.காமராஜ், சிட்டி திரு.R.கண்ணன், திரு.N.வித்யாசங்கர், திருமங்கலம் மோனிகா ரெட்டி திருமண தகவல் மைய நிர்வாகி திரு.சதீஷ்ரெட்டி, திருச்சி கன்டோன்மெண்ட் நிர்வாகி திரு.ராஜாராம், ரெட்டிமலர் ஆலோசனைகுழு உறுப்பினர் விருதுநகர் திரு.R.D.ராஜமுருகன், கோவில்பட்டி சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் திரு.சந்திராரெட்டி, சாத்தூர் சங்கத் தலைவர் திரு.தர்மலிங்கம், தூத்துக்குடி மாவட்டத்

தலைவர் திரு.பெத்துராஜ், விளாத்திகுளம் ரெட்டி இளைஞரணி நிர்வாகி திரு.சங்கர்ராம் உள்ளிட்ட பலரும் முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.




அதுசமயம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பின்வரும் TN 72 AF 3103, TN 69 AB 1533, TN 72 CY 0032, TN 69 AC 0862, TN 69 BS 3798, TN 69 BQ 9901, TN 69 BL 5117, TN 69 BF 4740 எண்களைக் கொண்ட நான்கு சக்கர வாகனங்களில் நிவாரணப்பொருட்களை ஏற்றி பகுதி வாரியாக பிரிக்கப்பட்டு அனுப்பி வழங்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி நகரம், வீரநாயக்கன்தட்டு, முத்தையாபுரம், ஸ்ரீவைகுண்டம் தாலுகாவை சேர்ந்த ஏரல் நகரில் பத்ரகாளியம்மன் கோயில் தெரு, நாடார் இரண்டாவது தெரு, ஆறுமுகமங்களம், கொட்டாரக்குறிச்சி, தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட சோட்டையன்தோப்பு, முத்துநகர் பகுதி, ஊரணி ஒத்தவீடு பகுதிகளில் நிவாரணப் பொருட்கள் விநியோகிக்கும் பணி தொடங்கியது. நிவாரணக் குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களிடம் முன்னதாகவே நேரில் சென்று நிவாரணப் பொருள் வழங்குவதை குறித்த முறையான அறிவிப்பினை வெளியிட்டு ஒவ்வொரு குடும்பத்தினருடைய அடையாள அட்டையினை சேகரித்து அனைத்துக் குடும்பங்களுக்கும் மளிகைப் பொருட்கள் அடங்கிய பை ஒன்றும், ஐந்து கிலோ அரிசியும் வழங்கப்பட்டது.

**இரண்டாம் நாள் நிகழ்ச்சியினை** 28.12.2023 தமிழ் நாடு ரெட்டி நலச்சங்க முன்னாள் மாநிலப் பொருளாளரும், விளாத்திகுளம் ரெட்டி ஜனசங்க முன்னாள் தலைவருமான திரு.R.V.செல்வகுமார் அவர்கள் நன்கொடை வழங்கி நிவாரணப்பணியினை தொடங்கி வைத்தார்.

நிவாரணக்குழுவினர் தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி தாலுகா பகுதிகளான அரசல்பேட்டை, வெள்ளாளன்விளை, வட்டன்விளை,





ஸ்ரீவைகுண்டம் பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிச்சென்றனர். வட்டன்விளை ஆசிரியை திருமதி.சரஸ்வதி, கவுன்சிலர் திரு.விஜயகுமார் உள்ளிட்ட நிர்வாகிகளை நேரில் சந்தித்து பாதிப்புகளை கேட்டறிந்தனர். தொடர்ந்து வெள்ளாளன்விளை பேராயர் அசரியா நினைவு மேல்நிலைப்பள்ளி முகாமிலும், தூய திருத்துவ ஆலயத்திற்கு சொந்தமான தேவாலய தியான மண்டபத்திலும் (MEDITATION HALL) தங்க வைக்கப் பட்டிருந்த பாதிப்புக்குள்ளான மக்களை நேரில் பார்வையிட்டு அத்தியாவசியத் தேவைகள் குறித்து



திரு.V.செல்வராஜு உடன் சென்ற குழுவினர் கேட்டறிந்தனர். அதுசமயம் நம்பியார் ஆறு, காளிகேசம் ஆறு இந்தப்பகுதியில் ஓடுவதால் அதனுடைய கரைபுரண்ட காட்டாற்று வெள்ளத்தால் இந்தக்கடுமையான பாதிப்பு ஏற்பட்டது என்றும் இதனால் பனை மரத்தினுடைய விளைச்சலை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும், வாழ்வாதாரத்தை இழந்து நிற்கிறோம் என்றும், பலர் வீடுகளையும், வளர்ப்பு பிராணிகளையும் இழந்து நிர்கதியாய் நிற்கிறோம் எனத் தெரிவித்தனர். அது சமயம் கிராமப்பஞ்சாயத்து தலைவர், ஒன்றியதலைவர் ஆகியோருடன் கலந்தாலோசித்து கூடுதலாக அரிசியும், நிவாரணப்பொருட்களும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டது.

**மூன்றாம் நாள் நிகழ்ச்சியினை** 29.12.2023 அன்று திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உட்பட்ட ரெட்டியார்பட்டி, சிந்தாமணி, முனஞ்சிப்பட்டி, சிவந்திபட்டி, மூலக்கரைப்பட்டி பகுதிகளில் வழக்கறிஞர் திரு.சங்கர் அவர்களின் அறிமுகத்தோடு ரெட்டியார்பட்டி திரு.நம்பி ரெட்டியார், திரு.முரளி ரெட்டியார், திரு.ராஜு, திரு.முரளிதரன் முனஞ்சிப்பட்டி திரு.மாரிமுத்து அவர்களின் உதவி–யோடு நிவாரணப்பொருட்கள் வழங்கும் பணி நடைபெற்றது. ரெட்டியார்பட்டி கிராமத்தில் ஏறத்தாழ 400 ரெட்டியார் குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் ஏறத்தாழ 260 குடும்பங்களுக்கும்





மேலானவர்கள் பெரும்பாதிப்புகளை சந்தித்திருந்தனர். அவர்களுக்கு நம் நிவாரணப் பொருட்கள் இரவோடு இரவாக இறக்கி வைக்கப்பட்டு அடுத்தநாள் விநியோகித்துக் கொள்கிறோம் என திரு.நம்பி ரெட்டியார் நிவாரணக்குழுவினரிடம் தெரிவித்தார். அதேபோல் ஓட்டுனர் திரு.ராஜூ அவர்களின் உதவியோடு சிவந்திப்பட்டியிலும், சிந்தாமணி கிராமப்பஞ்சாயத்தின் துணைத் தலைவர்



திரு.சுப்பிரமணியன் அவர்களின் உதவியோடு அப்பகுதி மக்களுக்கு நிவாரணப்பொருட்கள் வழங்கப்பட்டது.

நிறைவாக நிவாரணப் பணியில் ஈடுபட்ட ஓ.பி.ஆர். நினைவுத்தொண்டு அறக்கட்டளை நிர்வாகிகளின் பணியினைப்பார்த்து பாராட்டிய திரு.நம்பி ரெட்டியார் குழுவினருக்கு சிற்றுண்டி வழங்கி கௌரவித்தார். இத்தகைய பணிகளை பயிற்சிப்பெற்ற சிறந்த தலைமையின் கீழ் மட்டுமே செய்யமுடியும் என சுட்டிக் காட்டினார். சமுதாய பிரச்சனை வரும்போது தன்னிச்சையாக எழுந்து சரிசெய்யும் பண்பு இன்றைய இளம் தலைமுறையினரிடத்தில் இல்லாமல் போயிருந்தது. அவை மீண்டும் அவர்களிடையே ஏற்பட ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளை வழி செய்தது அதற்கு இயற்கை சீற்றம் வழிவகுத்துள்ளது எனக் கூறினார். அனைத்து நிர்வாகிகளுக்கும், தன்னார்வலர்களுக்கும் ஓ.பி.ஆர். நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் சார்பில் அதன் நிறுவனர் திரு.V.செல்வராஜூ அவர்கள் நன்றித் தெரிவித்துக் கொண்டார்.





# நெ.1 டோல்கேட் ரெட்டி நலச் சங்கம் 22வது குடும்ப விழா மற்றும் "வெள்ளி விழா"




நெ.1 டோல்கேட் ரெட்டி நலச்சங்க 22வது குடும்ப விழா மற்றும் சங்கம் தொடங்கப்பட்ட 25வது ஆண்டு வெள்ளி விழா கடந்த 25.12.2023 அன்று நடைபெற்றது. இதனையொட்டி நெ.1 டோல்கேட்டில் உள்ள நாராயணா மஹால் திருமண மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை குடும்ப விழா சீரும் சிறப்புடன் நடைபெற்றது.

காலை 9.00 மணியளவில் 25 வயதுக்குட்பட்டப் பெண்களுக்கான கோலப்போட்டி மற்றும் தண்ணீர்க் குடம் தூக்கும் போட்டிகள், திருமங்கலம் திரு.P.ஆனந்தன் குழுவினர் மங்கல இசையுடன் விழா இனிதே தொடங்கப்பட்டது.

காலையில் வரவேற்பு நிகழ்ச்சியினை தொடர்ந்து அனைவருக்கும் கடலை மிட்டாய், எள் மிட்டாய், இஞ்சி மிட்டாய், நெல்லிக்கனி, தேநீர், வெஜிட்டபிள் சூப், சுண்டல், பஞ்சு மிட்டாய் மற்றும் பாப்கார்ன் வழங்கப்பட்டது. மாணவச்செல்வங்களின் மனநிறைவிற்காக துப்பாக்கி சுடும் விளையாட்டு போட்டி இடம் பெற்றிருந்தது.

தொடர்ந்து, மகளிர் அணியினர் திருமதி.இரா.சித்ரா, திருமதி.சு.கலா, திருமதி.பி.ரம்யா, திருமதி.இரா.செல்வி, திருமதி.பி.சுபா ஆகியோர் குத்துவிளக்கு ஏற்ற, செல்விகள் பி.சக்ஷிதா மற்றும் அ.மித்ரா தமிழ்த்தாய் வாழ்த்துகள் பாட, செல்வி.ஸ்ரீவர்ஷினி கண்ணன் பரதநாட்டியத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. அதன் பின் செயலாளர் திரு.து.மணிவண்ணன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தலைவர்




திரு.இரா.மதிவாணன் அவர்களின் தலைமை உரையுடன் விழா இனிதே தொடர்ந்தது. கடந்த ஆண்டு இறைவனடிச்சேர்ந்த நமது உறவுகள் 24 நபர்களுக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.




தலைவர் திரு.இரா.மதிவாணன் அவர்களின் தலைமை உரையில், “கடந்த ஆண்டு குடும்ப விழாவிற்குப் பிறகு நமது சங்கம் செய்த சாதனை–களாக–பாத்திரங்கள் மற்றும் பர்னிச்சர்கள் வாங்கியது, திருமணத் தகவல் மையப்பயன்பாட்டிற்கு கணினி மற்றும் பிரிண்டர் வாங்கியது, மகளிர் அணியினர் பயிற்சி பெற தையல் மெஷின், எம்ப்ராய்டரி மெஷின் வாங்கியது, சங்கம் பதிவு புதுப்பித்தல் உட்பட பல்வேறு நிகழ்வுகளை விளக்கிப் பேசினார்.

இவரைத் தொடர்ந்து, திருச்சி மாநகர ரெட்டி நல சங்கச்செயலாளர் திரு.அ.ராஜாசிதம்பரம் அவர்கள் சங்கச்செயல்பாடுகள் பற்றி உரையாற்றினார்.

தொழில் அதிபர் திரு.K.R.சுரேஷ்குமார் அவர்கள் சங்கத் திருமணத் தகவல் மைய உபயோகத்திற்காகக் கணினி மற்றும் பிரிண்டரை சங்கத்திற்கு இலவசமாக வழங்க திருமதி.இரா.சித்ரா அவர்களும், துணைத்தலைவர் திரு.கி.ரெங்கராஜு அவர்களும் அதனைப்பெற்றுக்கொண்டனர். வசதி குறைந்த நமது இன மாணவச் செல்வங்களுக்குக் கல்லூரியில் கல்வி பயில நிதி உதவி செய்வதாகவும் அவர்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான உதவிகள் செய்ய தயாராக உள்ளதாகவும் தமது உரையின் போது தெரிவித்தார்.




STATE BOARD, CBSE இரண்டு பிரிவிலும் முதலிடம் பெற்ற மாணவச்செல்வங்களுக்கு ஹரிணி ஜுவல்லர்ஸ் உரிமையாளர் திரு.செ.ராம்குமார் அவர்களால் வழங்கப்பட்ட பொற்காசும், இரண்டு மற்றும் மூன்றாம் இடம் பிடித்த மாணவச்செல்வங்களுக்குச்சங்கத்தின் சார்பாக வழங்கப்பட்ட பணமுடிப்பும் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவச் செல்வங்கள் அனை–வருக்கும் சங்கத்தின் சார்பாக புகைப்படத்துடன் கூடிய கேடயம் மற்றும் சான்றிதழும் திருமதி.கலா மணிவண்ணன் அவர்களால் வழங்கப்பட்டது. BOTANY DICTIONARY திரு.விஜயகுமார் ரெங்கராஜு அவர்களால்




வழங்கப்பட்டது. ஹரிணி ஜுவல்லர்ஸ் உரிமையாளர் திரு.செ.ராம்குமார் மற்றும் விக்னேஷ் குழுமத்தின் உரிமையாளர் திரு.வி.கோபிநாதன் ஆகியோர் மாணவச் செல்வங்களுக்கு DOCUMENT FILE வழங்கி சிறப்புரையாற்றினார்கள். அதுசமயம் வரன் பார்க்கும் பொழுது தொழில்முனைவோர்களுக்கும் பெண் கொடுக்க முன் வரவேண்டும் என்று திரு.செ.ராம்குமார் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

அஸ்வின்ஸ் ஸ்வீட்ஸ் உரிமையாளர் டாக்டர்.K.R.V.கணேசன் அவர்கள் தையல் மற்றும் எம்பிராய்டரி மெஷினை திருமதி.பி.சுபா, திருமதி.பி.ரம்யா, திருமதி.இரா.செல்வி, திருமதி.உ.லதா, திருமதி.ரா.நிவேதா ஆகியோரிடம் வழங்க அவர்கள் பெற்றுக் கொண்டனர். மேலும் அவர் தமது வாழ்த்துரையில் மகளிர் அணி செயல்பாடுகளைப் பாராட்டி பேசினார்.

விக்னேஷ் குழுமத்தின் தலைவர் திரு.வி.கோபிநாதன் அவர்கள் நெ.1 டோல்கேட் பகுதி உறுப்பினர்கள் முகவரி அடங்கிய கையேடு வழங்க கையேட்டினைத் தொகுத்தவரான மேனகா நகர் பகுதிப்பொறுப்பாளர் திரு.போ.ஆனந்தன் அவர்கள் பெற்றுக் கொண்டார். அதுசமயம் அவர் நம் சங்க வளர்ச்சி மற்றும் செயல்பாடுகள் குறித்துப் பாராட்டி சிறப்புரையாற்றினார்.

ஆடிட்டர் திரு.R.ராமதாஸ் அவர்கள் சங்கம் பதிவு செய்யப்பட்டச் சான்றிதழை (பதிவு எண் SRG / Tirchy / 173/2023) வழங்க, தலைவர் திரு.இரா.மதிவாணன், செயலாளர் திரு.து.மணிவண்ணன் மற்றும் பொருளாளர் திரு.இரா.இளங்கோவன் ஆகிய மூவரும் பெற்றுக்கொண்டனர்.

நமது நெ.1 டோல்கேட் மங்களாநகர் பகுதிப் பொறுப்பாளர் திரு.வே.சுரேஷ் அவர்களால் பயிற்சி கொடுக்கப்பட்டு அனைத்திந்திய அளவில் டேக்வாண்டோ கொரியன் கராத்தே (TAEKWONDO Korean Karate) போட்டியில் வெற்றிவாகை சூடி வெண்கலப் பதக்கம் பெற்ற செல்வி.தனிரிக்கா கார்த்திகேயன் அவர்களுக்கு புகைப்படத்துடன் கூடிய கேடயமும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நமது நெ.1 டோல்கேட், பழனியப்பாநகர் பகுதியைச் சேர்ந்த செல்வி.மோகனபிரியதர்ஷினி கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு திருச்சி காவேரி மகளிர் கல்லூரியில் பயில 50% கட்டணச்சலுகை கல்லூரி அறக்கட்டளை கமிட்டி உறுப்பினர் திரு.BPL ஜெயராமன் அவர்களின் சிபாரிசு மூலமாகவும், மீதம் 50% நெ.1 டோல்கேட் சங்கத்தின் சார்பாகவும் வழங்கப் பட்டது.

நற்றமிழ் நாவரசு முனைவர் கோபால நாராயணமூர்த்தி M.A.B.Ed.,M.Phil.,Ph.D அவர்கள் **'மாணவர்களின் எதிர்காலம்'** என்ற தலைப்பிலும், திருச்சி காவேரி மகளிர் கல்லூரி உதவிப்பேராசிரியை திருமதி.ம.இலக்கியா M.Sc.(IT),M.Phil., அவர்கள் **'குடும்ப உறவுகள் மேம்பட'** என்கிற தலைப்பிலும் சிறப்புரை யாற்றி அனைவரின் கவனத்தை ஈர்த்ததுடன் பார்வையாளர்கள் அரங்கு நிறைந்து அமைதியாகக் கேட்டது மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது.

75 வயது நிறைவடைந்த 25 உறுப்பினர்கள் நடப்பு ஆண்டிலும், கடந்த ஆண்டிலும் கௌரவிக்க விடுபட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் தம்பதி சகிதம் அழைக்கப்பட்டு பொன்னாடைப்போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். அதுசமயம் வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு சங்கம் துவங்கிய நாள் முதல் சங்க வளர்ச்சிக்கு உதவிய முன்னாள், இந்நாள் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் அனைவரும் கௌரவிக்கப்பட்டனர்.




விழா நிகழ்வுகள் அனைத்தையும் திருமதி.தே.செல்வராணி, திருமதி.S.செந்தில்குமாரி மற்றும் திருமதி.R.சுகன்யா ஆகியோர் அழகாகத் தொகுத்து வழங்கினர்.

மதியம் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மீண்டும் 2.30 மணியளவில் பெண்களுக்கான லக்கிபால் பாசிங் போட்டி (Lucky Ball Passing Game) கோகுலம் காலனி திரு.கோ.பாஸ்கர் அவர்களால் நடத்தப்பட்டு மூன்று மகளிருக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இருபாலருக்கும் லக்கிகார்னர் போட்டிகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு போட்டியிலும் மூன்று உறுப்பினர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



லக்கி ஃபேமிலி குலுக்கல் போட்டியை துணைத் தலைவர் திரு.கி.ரெங்கராஜு மற்றும் இணைச் செயலாளர் திரு.சு.கனகராஜு இருவரும் முன்னின்று நடத்தி மூன்று குடும்பத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

07.12.2023 அன்று நடைபெற்ற ஓவியப்போட்டிகள், தமிழ்பாட்டு, தமிழ் கதைகள் சொல்லுதல், திருக்குறள் ஒப்புவித்தல், பாரதியார் கவிதைகள், கோலப்போட்டி, தண்ணீர்குடம் தூக்கும் போட்டி, லக்கி கார்னர், லக்கி ஃபேமிலி ஆகியவற்றில் வெற்றி வாகை சூடிய அனைவருக்கும் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகிகள் மூலம் பரிசுகள் வழங்கப்பட்டன. மாணவச்செல்வங்களின் இன்னிசை நடனத்திற்குப் பிறகு அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் பேனா வழங்கப்பட்டது.

வெள்ளிவிழா ஆண்டை முன்னிட்டு உறுப்பினர்கள் அனைவருக்கும் வெள்ளி முலாம் பூசப்பட்ட சுவாமிப் படம் அடங்கிய தொகுப்பு வழங்கப்பட்டது.

குடும்ப விழா முன்னேற்பாடுகளையும், நிகழ்வுகளையும் தலைவர் திரு.இரா.மதிவாணன், செயலாளர் திரு.து.மணிவண்ணன், பொருளாளர் திரு.இரா.இளங்கோவன், துணைத்தலைவர்கள் திரு.கி.ரெங்கராஜு, திரு.வெ.ராமராஜு, திருமதி.இரா.செல்வி, இணைச்செயலாளர்கள் திரு.சு.கனகராஜு, திரு.போ.அசோகன், திருமதி.பி.ரம்யா, தணிக்கையாளர்கள் திரு.நா.சீனிவாசன், திரு.ரா.ரெங்கராஜு, திரு.வீ.ஞானசேகரன், நடுவர்கள் திரு.இரா.அன்பழகன், திரு.உ.ராமராஜு, திருமதி.தே.செல்வராணி, திருமதி.ரெ.கலைச்செல்வி, திருமதி.ஆ.கிருபாராணி, திருமதி.இரா.சித்ரா, திருமதி.சு.சரண்யா, பகுதிப் பொறுப்பாளர்கள் திரு.பெ.கி.செல்லதுரை, திரு.ரெ.ரவிச் சந்திரன், திரு.போ.ஆனந்தன், திரு.ப.ஜெய்சங்கர், திரு.சி.சிவக்குமார், திரு.மா.ஜெயபால், திரு.பெ.சத்தியமூர்த்தி, திரு.கி.வெங்கடாஜலபதி, திரு.ந.அரவிந்தன், திரு.வெ.ராஜேந்திரன், திரு.கி.சுந்தரராஜன், திரு.சே.கிருஷ்ணமூர்த்தி, திரு.மா.செல்வக்குமார், திரு.செ.தேவேந்திரன், திரு.து.செல்வராஜ், திரு.சி.சிவஞானம், திரு.கி.சந்திரசேகரன், திரு.வே.சுரேஷ், திரு.து.அசோகன், திரு.கு.செந்தில், திருமதி.பி.சுபா, திருமதி.ரா.நிவேதா, திருமதி.உ.லதா மற்றும் தன்னார்வலர்கள் திரு.வீ.ரெங்கராஜ், திரு.கோ.பாஸ்கர், திரு.வா.மணிமாறன், திரு.ப.கோவிந்தராஜு, திரு.ந.செல்வராஜு, திரு.கி.நாராயணசாமி, திரு.K.S.மோகன்ராஜ், திரு.ரெ.பரமசிவம், திரு.ஈ.மேகநாதன், திரு.வி.சந்திரன், திரு.வெ.ஜெயராமன், திரு.கே.ஜெயராமன், திரு.ந.பாஸ்கர், திரு.செந்தில், திரு.ரெ.விஜயகுமார், திரு.க.விஜயகுமார், திரு.செ.ஸ்ரீராம், திரு.R.பார்த்தசாரதி, திரு.சி.அரசுராமநாதன், திருமதி.T.சரளா, திருமதி.இரா.சித்ரா, திருமதி.M.சித்ரா, திருமதி.மு.லதா, திருமதி.P.கீதா,




திருமதி.A.வீணா, திருமதி.T.நித்யா, திருமதி.T.கிருஷ்ணவேணி, திருமதி.P.சுகந்தி, திருமதி.M.பிரமிளா, திருமதி.M.லதா, திருமதி.V.கலாவதி, திருமதி.R.சுகந்தி ஆகியோர் முன்னின்று விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கினர்.

பொருளாளர் திரு.இரா.இளங்கோவன் நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவடைந்தது. விழா நிறைவாக அனைவருக்கும் பட்டாணி, பஜ்ஜி, தேநீர் மற்றும் காபி வழங்கப்பட அனைவரும் விழா இனிதே நிறைவுற்ற மகிழ்ச்சியுடனும் அடுத்த ஆண்டு குடும்ப விழா கனவுகளுடனும் விடைபெற்றுச் சென்றனர். (சங்க கைபேசி எண் - 7598099799).



# துறையூர் நகர ரெட்டி நலச் சங்கம் 23ஆம் ஆண்டு குடும்ப விழா



கடந்த 24.12.2023 அன்று திருச்சி துறையூர் நகர ரெட்டி நலச் சங்கம் 23 ஆம் ஆண்டு குடும்ப விழா துறையூர் பிரசன்ன மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினர்கள், சங்க உறுப்பினர்கள், குடும்ப உறுப்பினர்கள் என அனைவரும் கலந்துக்கொண்டு குடும்பவிழாவினை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கு துறையூர் நகர ரெட்டி நலச் சங்கத் தலைவர் திரு.S.கருணாகரன் தலைமை தாங்கினார், சங்கச்செயலாளர் திரு.K.தியாகராஜன் ஆண்டறிக்கை வாசித்தார், பொருளாளர் திரு.D.சிவக்குமார் நிதிநிலை அறிக்கையை வாசித்து ஒப்புதல் பெற்றார்.

சிறப்பு விருந்தினராக **தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மாண்பமை வேந்தர் ஐயா திரு.A.சீனிவாசன்** அவர்கள் கலந்துக்கொண்டு 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் சாதனைப் படைத்த மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். அதுசமயம் 13 மாணவ, மாணவிகளுக்கு தனது சொந்தப் பணத்திலிருந்து ஊக்கத்தொகையாக தலா ரூபாய் 5,000/- வழங்கினார்.

முன்னதாக சிறப்பு விருந்தினர் ஐயா திரு.A.சீனிவாசன் அவர்கள் பூரண கும்ப மரியாதை யுடன் நிகழ்ச்சி நடைபெறும் மேடைக்கு அழைத்து வரப்பட்டார்.

சிறப்பு அழைப்பாளர்களாக தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி செயலாளர் திரு.P.நீல்ராஜ், ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனத் தலைவரும், கே.ஆர்.டி.கேரியர் அகாடமியின் இயக்குநருமான திரு.V.செல்வராஜு, AGM கல்வி நிறுவனங்களின் தாளாளரும், பனானா லீப் உணவகத்தின் உரிமையாளருமான திரு.R.மனோகரன், கண்ணப்பா உணவகங்களின் உரிமையாளர் திரு.M.கண்ணன், இந்தியா கெமிக்கல்ஸ் கம்பெனியின் உரிமையாளர் திரு.P.ரங்கநாதன், பெரம்பலூர் திரு.V.ஜெயராமன், வயலூர் ரோடு ரெட்டி நலச்சங்கத்தலைவர் திரு.P.ஜனார்த்தனம், நாமக்கல் திரு.R.அன்பழகன், ஹரிணி ஜூவல்லர்ஸ் உரிமையாளரின் தந்தை திரு.செல்வராஜ் மற்றும் துறையூர் தாலுகா, திருச்சி, பெரம்பலூர், நாமக்கல், சேலம் மாவட்ட ரெட்டி நலச் சங்க நிர்வாகிகள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிறப்பு பேச்சாளராக விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் வேங்கை திரு.செ.சந்திரசேகரன் அவர்கள் கலந்துக்கொண்டு விழா பேருரை நிகழ்த்தினார். அதுசமயம் தமது உரையில், “இன்றைய காலக்கட்டத்தில் நம் சமூகத்தில் மட்டுமல்ல, மாநிலம் முழுவதிலுமே முன் எப்போதையும் விட இளைஞர்களைப் பற்றி அதிகம் பேசப்படுவது யாவரும் அறிந்த உண்மை. வெறும்






பேசப்படுபவர்களால் மட்டுமல்லாமல், நம் சமூகத்தின் நம்பிக்கையாகவும் இன்றைய இளைஞர்கள் கருதப்படுகிறார்கள். இப்படி முக்கியத்துவம் வாய்ந்த சமுதாயம் வயதை கொண்டு கணக்கிடாமல் அவர்களின் மனதின் எண்ணங்களை, சிந்தனைகளை வைத்து கணக்கிடவேண்டும். இதில் முதியோரும் இளமையான சிந்தனை இருந்தால் இளையவராக கருதப்படுவார். இதயமே மனதின் இருப்பிடம், மனமே மனிதனின் சிறிய மூளை என இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது. எண்ணங்கள் இளமையாக இருப்பின் செயல்களும் இளமையாக இருக்கும். அப்படிப்பட்ட ஒருவரை சமுதாயத்தில் அடையாளம் காட்ட வேண்டுமென்றால் அண்ணன் செல்வராஜு அவர்களை சொல்லலாம். அவரால் இந்த சமூகத்திற்கு ஈர்க்கப்பட்டவர்களில் நானும் ஒருவன். ஏறத்தாழ 25



ஆண்டுகளுக்கு மேலாக நான் அவரோடு பயணித்து நிறையவே கற்றுக்கொண்டிருக்கிறேன். இங்கு குடும்ப உறவுகள் குறித்து நிறையவே சிறப்பு விருந்தினர்கள் பேசி இருக்கிறார்கள். இந்த நவீன யுகத்தில் திருமணம் என்ற ஆலயத்தின் அலங்கார வேலைகள் மட்டும் மாறியுள்ளதே தவிர, அடிப்படை அம்சங்களும் இயல்புகளும் மாறாமல் தான் இருக்கின்றன. கணவன்–மனைவி இருவரும் வேலைக்கு செல்ல வேண்டிய நிலைமை, தனிக் குடித்தன வாழ்க்கை முறை, ஆண்–பெண் உறவு நிலைகளில் ஏற்பட்டுள்ள புதிய பரிமாணங்கள், தனிமனித சுதந்திர சிந்தனைகள் போன்ற இவை யாவும் திருமண பந்தத்தில் தம்பதியினரிடையேயான எதிர்பார்ப்புகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தி யுள்ளன. இந்த எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களாக மாறும் போதும், பேசி தீர்க்கவேண்டியவை பிரச்சனைகளாக மாறும்போதும் மணமுறிவே தீர்வு என்று எண்ணாமல் மனமாற்றமே மருந்து என்கிற நம்பிக்கை மிக அவசியம். இதற்கான அடித்தளத்தையும் உறவுகளை மேம்படுத்தி கொள்ளும் வாய்ப்பினையும் இதுப் போன்ற குடும்ப விழாக்களின் மூலம் உருவாக்கப்பட வேண்டும் என்பதே எனது ஆசை. வேறுபாடுகளை பொறுமையுடன் அனுசரித்து, விட்டுக்கொடுத்து இந்த குடும்ப விழா மூலம் வாழ முயன்றால் இவ்விழா பயனுள்ளதாக அமையும். அதற்காக முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற இந்த குடும்ப விழாவை சிறப்பாக நடத்தி வரும் நிர்வாகிகளுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனத்தலைவரும், கே.ஆர்.டி.கேரியர் அகாடமியின் இயக்குநருமான திரு.V.செல்வராஜு அவர்கள் பேசும் போது, “23வது குடும்ப விழாவை நடத்தி வரும் நிர்வாகிகளுக்கு நெஞ்சார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். நம் உறவினர்களும், சொந்தங்களும் கூடியுள்ள இந்த வேளையில் நான் சொல்ல விரும்புவது, நம் முன்னோர்களையும், தலை வர்களையும் எண்ணி பெருமை மட்டும் கொள்ளாமல் அவர்கள் கடைப்பிடித்த வாழ்க்கை முறைகளையும், நெறிகளையும் பழகவும், பழக்கமாக்கிக் கொள்ளவும் வேண்டியது நம் கடமை. மாற்றம் பிறரால் வரும் என காத்திருப்பதை விட, குற்றம் கூறுவதை விட நாம் காண விரும்பும் மாற்றமாய், நாம் ஒவ்வொருவரும் மாறினால் தானாகவே நம் சமுதாயம் மாறிவிடும். அதன் அங்கங்களாக வாழும் எல்லா உறவினர்களும் மாறிவிடுவர். இதை நாம் உணர்ந்து செயல்பட்டு, செயல்படுத்தும்வரை நமது கோரிக்கைகளும், உரிமைகளும் பெறமுடியாது. அதை அடைய வேண்டுமானால் நம் தன்னலத்தை அழித்து ஒழித்தாலேயே சாத்தியமாகும். நம் சமூகத்திற்கும் மேலாக நம்மை எண்ணிக்கொள்ளாமல் நம்மை விட இந்த சமுதாயம் பெரியது, முக்கியமானது என உணர வேண்டும். இதை உணரும் வகையில் வலுவான முன்னெடுப்புகள் தேவை. அப்படி செய்தால் நிச்சயம் நமக்கும், நம் சமூகத்திற்கும் உயர்வுநிலை ஏற்படுவது உறுதி. நம் கிராமப்புற ஏழை இளைய தலைமுறை யினர் அனைவரும் கே.ஆர்.டி. கேரியர் அகாடமியின் மூலம் வழங்கப்படும் TNPSC, UPSC, SSC, TNUSRB போன்ற அரசுத்துறை நிறுவனங்கள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கான இலவசப்பயிற்சியில் இணைந்து பயன்பெற்று அதிகாரமிக்கப்பதவிகளுக்கு செல்ல வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்” என்றார்.

நிகழ்ச்சியில் துறையூர் ரெட்டி நலச்சங்க முன்னாள் தலைவர்கள் டாக்டர் R.ரவீந்திரன், திரு.K.R.ரவி, திரு.R.இராஜகோபால், திரு.T.நடராஜன், திரு.C.ரவிச்சந்திரன், திரு.R.இராஜாராம், மோனிகா ரெட்டி திருமண தகவல் மைய நிர்வாகி மோனிகா திரு.சதீஷ், துறையூர் திருமணத்தகவல் மையப் பொறுப்பாளர்கள் திரு.S.சிவானந்தம், திரு.D.ராதாகிருஷ்ணன் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

சிறப்பு அழைப்பாளர் தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி செயலாளர் திரு.P.நீல்ராஜ் அவர்கள் பேசும் போது, “தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வரும் துறையூர் நகர ரெட்டி நல சங்கம் இந்தப்பகுதி மக்களை ஒருங்கிணைப்பதோடுஒற்றுமையின் அடையாளமாக திகழுவது மகிழ்ச்சியை தருகிறது. கல்வியில் சிறந்த மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தியும், ஏழை மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை வழங்கியும் வருவது அவர்களுக்கு பேருதவியாகவும், தூண்டுகோலாகவும் அமையும் செயலாகும். இதற்கு பெரம்பலூர் மாவட்ட ரெட்டி நல சங்கமும், ஐயா அவர்களது உதவியும் என்றென்றும் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்று இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

AGM கல்வி நிறுவனங்களின் தளாளரும், பனானா லீப் உணவகத்தின் உரிமையாளருமான திரு.R.மனோகரன் அவர்கள் குடும்ப உறவுகளின் முக்கியத்துவம் குறித்தும், கூட்டுக்குடும்பத்தின் அவசியம் குறித்தும் சிறுகதைகளின் மூலம் எடுத்துச் சொன்னார். குடும்பத்தில் நல்ல உறவுகளை பேணிக் காக்க வேண்டும் என்பதை எடுத்துரைத்தார். பிற சமுதாயங்கள் நம்மை கண்டு வியப்பது நமது பண்பாடு, குடும்பப்பற்று, திருமண பந்தத்தின் மேல் கொண்டுள்ள நம்பிக்கை ஆகியவற்றைத் தான். வளரும் சில இளம் தம்பதியினரிடையே அடிப்படை புரிதல் இல்லாத காரணத்தினாலேயே திருமணங்கள் தோல்வியில் முடிகின்றன. அவர்களும் இதுபோன்ற குடும்ப விழாக்களில் கலந்துக்கொண்டு நம் உறவு களை மேம்படுத்தும் வகையில் ஒருவரையொருவர் புரிந்துக்கொண்டு வாழவேண்டும்” என்றார்.

நிகழ்ச்சியின் போது சங்க துணைத்தலைவர்கள் திரு.K.வரதராஜன், திரு.P.சுப்புரெட்டி, திரு.P.ராஜ்மோகன், திரு.S.நடராஜன், திரு.S.மதன் மற்றும் இணைச் செயலாளர்கள் திரு.S.காமராஜ், திரு.சிட்டி. R.கண்ணன், திரு.N.வித்யாசங்கர், திரு.K.கண்ணன், திரு.N.மனோகரன், துறையூர் நகர ரெட்டி இளைஞர் பேரவை தலைவர் திரு.S.மணிகண்டன், செயலாளர் திரு.J.தீபக், பொருளாளர் திரு.V.நவநீதகிருஷ்ணன், துறையூர் நகர ரெட்டி மகளிர் அணியின் தலைவி திருமதி.V.உமாமகேஸ்வரி, செயலாளர் திருமதி.C.விஜயா, பொருளாளர் திருமதி.R.பாரதி ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

கலந்துக்கொண்ட உறுப்பினர்களின் பெயர்கள் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

நிறைவாக, துறையூர் நகர ரெட்டி இளைஞர் பேரவையின் செயலாளர் திரு.J.தீபக் அவர்கள் பேசும்போது, “வருகைத்தந்த சிறப்பு விருந்தினர் தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழக மாண்பமை வேந்தர் ஐயா திரு.A.சீனிவாசன் அவர்களுக்கும், சிறப்பு அழைப்பாளர்கள் தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி செயலாளர் திரு.P.நீல்ராஜ், ஓ.பி.ஆர் நினைவுத் தொண்டு அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் திரு.V.செல்வராஜ் அவர்களுக்கும், பனானா லீப் உணவகத்தின் உரிமையாளர் திரு.R.மனோகரன் அவர்களுக்கும், கண்ணப்பா உணவகங்களின் உரிமையாளர் திரு.M.கண்ணன் அவர்களுக்கும், இந்தியா கெமிக்கல்ஸ் கம்பெனியின் உரிமையாளர் திரு.P.ரங்கநாதன் அவர்களுக்கும், பெரம்பலூர் திரு.V.ஜெயராமன் அவர்களுக்கும், விளாத்திகுளம் ரெட்டி ஜன சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் வேங்கை திரு.செ.சந்திரசேகரன் அவர்களுக்கும், நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கிய திருமதி.J.சுஜாதா, திருமதி.N.மேகலா மற்றும் துறையூர் தாலுகா நிர்வாகிகள், திருச்சி, பெரம்பலூர், நாமக்கல், சேலம் மாவட்ட ரெட்டி நலச்சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் நன்றித்தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

இறுதியில் கலந்துக்கொண்ட அனைவருக்கும் இரவு விருந்துடன் விழா சிறப்பாக நிறைவடைந்தது.

## இந்தியாவின் முதல் பெண் I.F.S. சாதனையாளர் சி.பி.முத்தம்மா (1924-2009)

சி.பி.முத்தம்மா கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை வனத்துறையில் அதிகாரியாக பணியாற்றியவர். இவரது 9வது வயதிலேயே தந்தை காலமானார். இவரது தாயார் இவரையும் இவருடன் பிறந்த 4 குழந்தைகளையும் நன்கு படிக்க வைத்து அதில் வெற்றியும் கண்டார்.



★ கர்நாடகாவில் பிறந்து பள்ளிப்படிப்பை முடித்த பின்னர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பட்டப்படிப்பு படித்தார். அதன் பின்னர் I.F.S. தேர்வில் கலந்துக் கொண்டு அதில் வெற்றி பெற்றார்.

★ தடையை தகர்த்தல் : இந்தியாவில் I.A.S., I.F.S. தேர்வுகளில் பெண்கள் எழுதி அதில் வெற்றி பெற்றாலும், அந்த பணிகள் செல்ல முடியாத நிலை இருந்தது. அவற்றை எதிர்த்து போராடி அந்தத் தடையை தகர்த்த முதல் பெண் சாதனையாளர் சி.பி.முத்தம்மா அவர்கள், இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத் துறை அதிகாரி.

★ 1949ம் ஆண்டு இந்திய அரசுப்பணியில், முதல் பெண் I.F.S. அதிகாரியாக பணியில் சேர்ந்தார்.

★ முதன் முதலில் நெதர்லாந்து நாட்டில், இந்திய தூதரக அதிகாரியாக பணியாற்றினார். 1982ம் ஆண்டு மத்திய அரசுப் பணி–யிலிருந்து ஓய்வு பெற்றார்.

★ தனது வாழ்வில் இலட்சியத்தோடு செயல்பட்டு பல்வேறு போராட்டத்தைக் கடந்து, இந்தியாவின் முதல் பெண் வெளியுறவுத் துறை அதிகாரி என்ற பெருமையை பெற்று, இந்திய வரலாற்றில் சாதித்த பெண்மணியாக வாழ்ந்தார்.

## இரத்த வங்கி உருவாகிய விதம் (Blood Bank Creation)

★ ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதனின் இரத்தத்தை செலுத்தி உயிர் காக்கலாம் என்பதை இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் பளெண்ட்ஸ் என்பவர் 1818ம் ஆண்டு கண்டுபிடித்தார்.

★ விபத்துக்களாலும், நோயாலும் பாதிக்கப்பட்டவர் களுக்கு இரத்தம் மிகவும் தேவைப்படுகிறது. இதனால் மற்றவர்களின் இரத்தத்தை உடலில் செலுத்தி பாதிக்கப்பட்டோரின் உயிர் காக்கப்பட்டு வருகிறது.

★ ஜேம்ஸ் பளெண்ட்ஸ் கண்டுபிடிப்பால், இன்று உலகில் உள்ள லட்சக்கணக்கான உயிர்கள் காக்கப்படுகின்றன.

★ உலகின் முதல் இரத்த வங்கி : சார்லஸ் ரிச்சர்டு ட்ரூஸ் (Charles Richard Drews) எனும் அமெரிக்க டாக்டர் 1937–ல் அமெரிக்க மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்பட்ட மருத்துவமனையில் இரத்த வங்கியைத் துவக்கினார். இதுவே உலகின் முதல் இரத்த வங்கி ஆகும். இவர் இரத்த வங்கியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

# பெரம்பலூர் மாவட்ட ரெட்டி நலச் சங்க குடும்ப விழா




கடந்த 30.12.2023 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் பெரம்பலூர், துறையூர் ரோடு, தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி வளாகத்தில் பெரம்பலூர் மாவட்ட ரெட்டி நலச்சங்க குடும்ப விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பெரம்பலூர் ரெட்டி நல சங்கத் தலைவர் **திரு.K.R.V.கணேசன்** அவர்கள் தலைமை தாங்கினார். தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், மாண்பமை வேந்தர் ஐயா **திரு.அ.சீனிவாசன் ரெட்டியார்** அவர்கள் ஆசியுடன் நிகழ்ச்சி சிறப்பாக தொடங்கியது.

நாமக்கல் தமிழ் சங்கச்செயலாளர் நற்றமிழ் நாவரசு **முனைவர் கோபாலநாராயணமூர்த்தி** அவர்கள் சிறப்பு பேச்சாளராக கலந்துக்கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.




தனலட்சுமி சீனிவாசன் கல்வி குழுமம் செயலாளர் திரு.ப.நீல்ராஜ், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் திரு.மு.அட்சயகோபால், அரும்பாவூர் சுவாமி விவேகானந்தா கல்வி குழுமம் திரு.M.ராஜேந்திரன், TVS ஏஜென்சீஸ் திரு.A.C.L. ஜெயராமன், பெரம்பலூர் ராஜென் பெட்ரோல் பங்க் உரிமையாளர் திரு.டாக்டர் எஸ்.சந்திரசேகரன், குரும்பலூர் திரு.R.தீனதயாளன், விவசாயிகள் சங்கத் தலைவர் திரு.R.ராஜாசிதம்பரம், சென்னை Agri KE Housing Pvt.Ltd., திரு.K.பாரி, இந்திரா பஸ் சர்வீஸ் திரு.V.ராஜசேகர், வடக்கலூர் திரு.S.தேவேந்திரன், வேணுகோபால் ஸ்டோர்ஸ் திரு.S.சேகர், நாரணமங்கலம் திரு.R.குமரகுருபரன், அ.மேட்டூர் திரு.M.R.C.பாண்டியன், வெண்பாவூர் திரு.S.வீரராகவன், அரும்பாவூர் திரு.N.ராமதாஸ், சென்னை ஸ்டோர்ஸ் திரு.A.வினோத், ஆலத்தூர், திமுக ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் திரு.என்.கிருஷ்ணமூர்த்தி, தனலட்சுமி சீனிவாசன் குழுமம் திரு.ப.மணி, திரு.P.ராஜபூபதி, அறிவாலயம் உயர்நிலைப்பள்ளி செயலாளர் திரு.S.P.சேகர், துபாய், ஹோட்டல் வசந்தபவன் திரு.R.ராஜேந்திரன், சக்ரா பால் குழுமம் திரு.S.ராஜகோபால், காவேரி உரக் கடை உரிமையாளர் திரு.V.வேணுகோபால், தனலட்சுமி சீனிவாசன் மெடிக்கல் காலேஜ் கேன்டீன் திரு.R.செல்வராஜ், பெரம்பலூர், தேவி ஏஜென்சீஸ் திரு.D.நாகராஜன், பெரம்பலூர் GVR புளூமெட்டல்ஸ் திரு.K.குணசேகரன், பூலாம்பாடி GKR லாரி சர்வீஸ் உரிமையாளர் திரு.G.K.R.ராமதாஸ், பெரம்பலூர் தேவி டிரான்ஸ்போர்ட் திரு.D.ராம்குமார், பெரம்பலூர் திரு.K.R.D.ஜெயக்குமார், அரும்பாவூர் சுவாமி விவேகானந்தா கல்வி குழுமம் திரு.R.ராஜா மணிகண்டன், மலையாளப்பட்டி திரு.G.லோகநாதன், அரிமா சங்க சாசனத்தலைவர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் திரு.மு.இராஜாராம், பாரத் டிரான்ஸ் போர்ட்ஸ் திரு.K.N.ஜெயராமன், MGR மன்ற மாவட்ட செயலாளர் திரு.M.N.இராஜாராம், குறிஞ்சி மளிகை திரு.E.ரெங்கராஜ், புதுநடுவலூர் சுபம் டிரான்ஸ் போர்ட் திரு.P.சுந்தரராஜ், AKR டிரான்ஸ்போர்ட்ஸ் திரு.R.ராஜசிம்மன், சன்மிக்ஸ் ரெடிமிக்ஸ் திரு.R.ராஜசேகர், சின்னாறு முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.P.சுரேஷ், கோவை Sree Daksha Property Developers திரு.J.மோகன், சிந்து பைனான்ஸ் திரு.R.பிரசன்னன், கொளக்காநத்தம், பூலாம்பாடி திரு.Dr.S.சம்பத், பாடாலூர் அம்மன் ஏஜென்சீஸ் திரு.S.ரசிகுமார், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம்,






ஹோட்டல் சரவணபவன் உரிமையாளர் திரு.V.அருண்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

நாமக்கல் தமிழ் சங்கச் செயலாளர் நற்றமிழ் நாவரசு **முனைவர் கோபாலநாராயணமூர்த்தி**




அவர்கள் சிறப்பு பேச்சாளராக கலந்துக்கொண்டு பேசிய போது 'நல்லதொரு குடும்பம்' என்கிற தலைப்பினை மையப்படுத்தி குடும்ப விழா பேரூரை நிகழ்த்தினார். அதுசமயம், "மூத்தோர் சொல்லை மதித்து இளையோர் கடைபிடித்து நடப்பது, இளை-யோர்களை பெரியோர்கள் அரவணைத்து செல்வது, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுப்பதன் அவசியத்தை நகைச்சுவை கலந்த உதாரணங் களுடன் உரையாற்றினார். மேலும், சமீபகாலமாக அதிகளவில் நடைபெற்று வரும் மணமுறிவு, திருமணத்திற்கு முன்னதாக பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக முரணாக பிள்ளைகள் செயல்படுவதையும் தவிர்க்கவேண்டியது அவசியம் என சமப நிகழ்வுகளுடன் எடுத்துக் கூறினார். குறிப்பாக ஒற்றை வரியில் சொல்ல வேண்டுமானால், ரெட்டியார் குடும்பங்கள் பிறருக்கு முன்னுதாரணமாக திகழவேண்டும். பாரதியாருக்கு காமு ரெட்டியார் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உதவி செய்தவர். இதுபோன்று பிறருக்கு உதவுகின்ற சமுதாயமாக ரெட்டியார் சமுதாயம் இருந்தது, இருந்துகொண்டிருக்கிறது. மேலும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கிய சமுதாயம் நம் ரெட்டியார் சமுதாயம். பிறருக்கு தர்மம் செய்வதில் கொடையிலே அறம் செய்வதிலே சிறந்து விளங்கியவர்கள் நம்மவர்கள். அத்தகைய பெருமைக்குரிய சமுதாயத்தில் பிறந்த நாம் ஒற்றுமை யாக இருக்கவேண்டும். அவ்வாறு செயல்பட்டால் நம்மால் எதையும் சாதிக்கமுடியும் என்ற கருத்துகளை மையப்படுத்தி தனது நாவண்மையால் அனைவரது கவனத்தையும் ஈர்த்து அவர்களின் செவிகளுக்கு விருந்தளித்தார்.

நிகழ்ச்சியின் போது பெரம்பலூரைச் சேர்ந்த திரு.ரவிச்சந்திரன் அவர்களின் 5 வயது மகன் மாஸ் டர்.G.G.R.திவித் 3 நிமிடம் 5 வினாடிகளில் 195 உலக நாடுகளின் கொடியினை மிக வேகமாக அடையாளம் கண்டு சாதனைப் படைத்துள்ளார். இந்த சாதனையை நோபல் உலக சாதனைப் புத்தக நிறுவனம் (Nobel Book of World Records) அங்கீகரித்து சான்றிதழ் வழங்கி யிருக்கிறது. இந்த சிறுவன் விழாவில் கௌரவிக்கப் பட்டார். அடுத்து, நாட்டார்மங்கலத்தைச்சேர்ந்த திரு.சம்பத் அவர்களின் மகன் செல்வன்.ராமச்சந்திரன் JEE Advanced 2023 தேர்வில் தேசிய அளவிலான தரவரிசை பட்டியலில் 52வது ரேங்க்கும், மாநில அளவில் 3வது ரேங்க்கும் பெற்றிருக்கிறார். இம் மாணவர் விழாவில் கௌரவிக்கப்பட்டார். மேலும், பெரம்பலூரைச்சேர்ந்த திரு.ரெங்கநாதன் அவர்களின் மகள் செல்வி.R.கவிஷ்னா 27.11.2023 நடைபெற்ற கோல்டன் கேட்ஸ் ஜூடோ 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 70 கிலோ எடைக்




கொண்ட பிரிவில் மாவட்ட அளவில் நடந்த போட்டியில் முதல் இடத்தைப்பிடித்துள்ளார். அவருக்கு கேடயமும், பரிசுத்தொகையும் வழங்கி விழாவின் போது கௌரவிக்கப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து, 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை மற் றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. பட்டப்படிப்பு பயிலும் வசதியில்லாத தகுதியான ஏழை மாணவ, மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப் பட்டது.

மாவட்ட அளவில் சிறந்த மதிப்பெண் பெற்றவர் களுக்கு முன்னாள் நகராட்சி துணைத் தலைவர் Dr.கி.முகுந்தன் அவர்களும், நகர அளவில் சிறந்த மதிப்பெண் பெற்றவர்களுக்கு அருணா ஜெயபாலன் நினைவுப்பரிசினை வள்ளலார் குழுமம் தலைவர்



திரு.ஆர்.ஜெயபாலன் அவர்களும், கல்வி உதவித் தொகையை திருமதி.அகல்யா கண்ணுசாமி அவர்களும், தேவகி அம்மாள் நினைவு கல்வி உதவித்தொகையை திருமதி.மல்லிகா ஜெயராமன் அவர்களும் மாணவ செல்வங்களுக்கு வழங்கினர்.

நிகழ்ச்சியில் பெரம்பலூர் நகரத்தலைவர் திருJ.அரவிந்தன், செயலாளர் திரு.R.செந்தாமரை கண்ணன், பெரம்பலூர் நகர இளைஞரணி தலைவர் திருJ.கார்த்திக், துணைத் தலைவர் திருS.மோகன்ராஜ், செயலாளர் திரு.V.ஜனார்த்தனன், துணைச் செயலாளர் திரு.S.ரஞ்சித், பெரம்பலூர் மாவட்ட டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகளிர் நற்பணி மன்ற தலைவி திருமதி.மல்லிகா ஜெயராமன், செயலாளர் திருமதி.சித்ரா புகழேந்தி, பொருளாளர் திருமதி.தீபா அரவிந்தன், பெரம்பலூர் ஒன்றிய தலைவர் திரு.S.ராமராஜ், துணைத்தலைவர் திரு.P.வேணுகோபால், செயலாளர் திரு.K.கனகராஜ், பொருளாளர் திரு.S.செல்வகுமார், பெரம்பலூர் ஒன்றிய இளைஞரணி தலைவர் திரு.V.ராதாகிருஷ்ணன், துணைத்தலைவர் திரு.S.சரவணகுமார், செயலாளர் திரு.R.ரகு, துணைச்செயலாளர் திரு.வே.சுரேஷ், வேப்பந்தட்டை ஒன்றிய தலைவர் திரு.S.ராமச் சந்திரன், செயலாளர் திரு.D.இரவி, பொருளாளர் திரு.P.செல்வக்குமார், வேப்பந்தட்டை ஒன்றிய இளைஞரணி தலைவர் திரு.சி.கிருஷ்ணராஜ9,




துணைத் தலைவர் திரு.S.சுதாகர், செயலாளர் திரு.D.மனோகரன், துணைச்செயலாளர் திரு.K.சம்பத், ஆலத்தூர் ஒன்றிய தலைவர் திரு.V.கண்ணன், துணைத்தலைவர் திரு.C.நீல்ராஜ், செயலாளர் திரு.D.சரவணன், துணைச் செயலாளர் திரு.N.சிவக்குமார், பொருளாளர் திரு.G.அசோக்குமார், ஆலத்தூர் ஒன்றிய இளைஞரணி தலைவர் திரு.S.மானோகர், துணைத்தலைவர் திரு.C.ரவிசேகர்(எ) சந்தோஷ், செயலாளர் திரு.K.விஜயபிரபு, துணைச்செயலாளர் திரு.K.ஆனந்தன், வேப்பூர் ஒன்றியம் கௌரவத்தலைவர் திரு.R.ராஜாராம், தலைவர் திரு.V.சந்திரன், துணைத்தலைவர் திரு.B.இரவிச்சந்திரன், செயலாளர் திரு.R.ராமதுரை, பொருளாளர் திரு.M.பால்ராஜ், வேப்பூர் ஒன்றிய இளைஞரணி தலைவர் திரு.R.சரவணன், துணைத் தலைவர் திரு.N.செல்வகுமார், செயலாளர் திரு.J.சசிக்குமார், துணைச் செயலாளர் திரு.R.பிரபு ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

விழாவில் பெரம்பலூருக்கு அருகிலுள்ள துறையூர் ரெட்டி நல சங்கம், திருச்சி நெ.1 டோல்கேட் ரெட்டி நல சங்கம், தில்லை நகர் ரெட்டி நல சங்கம், மேலசிந்தாமணி ரெட்டி நல சங்கம், உறையூர் ரெட்டி நல சங்கம், வயலூர் ரோடு ரெட்டி நல சங்கம், ஸ்ரீரங்கம் ரெட்டி நல சங்கம், பெரியார் நகர் ரெட்டி நல சங்கம், அரியலூர் ரெட்டி நல சங்கம், புதுக்கோட்டை ரெட்டி நல சங்கம், தஞ்சாவூர் ரெட்டி நலச் சங்கம் உள்ளிட்ட சங்கங்கள் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.




நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த சுமார் 2900 உறவுகளும், மற்ற மாவட்டத்தைச் சேர்ந்த 115 உறவுகளும் கலந்து கொண்டனர்.

கலை நிகழ்ச்சிகள் உட்பட விழா சிறப்பாக நடைபெற்றது.

நிறைவாக பெரம்பலூர் மாவட்ட ரெட்டி இளைஞர் அணி செயலாளர் திரு.M.இரவி அவர்கள், "வருகை தந்திருந்த சிறப்பு விருந்தினர் முனைவர் கோபாலநாராயணமூர்த்தி அவர்களுக்கும், நல் ஆசி வழங்கி ஆதரவு வழங்கிவரும் மாண்பமை வேந்தர் ஐயா திரு.அ.சீனிவாசன் ரெட்டியார் அவர்களுக்கும், பரிசு பெற்ற மாணவ, மாணவிகளுக்கும், நம் அழைப்பை ஏற்று வருகைத் தந்த திருச்சி, அரியலூர், தஞ்சாவூர் மாவட்ட, நகர, கிளை சங்க நிர்வாகி களுக்கும் பெரம்பலூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வரும் கிராம கிளை சங்க, ஒன்றிய, நகர, மாவட்ட சங்க நிர்வாகிகளுக்கும் இளை– ஞரணி, மகளிர் அணி நிர்வாகிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.



# உறையூர் ரெட்டி நலச் சங்கத்தின் குடும்ப விழா




திருச்சி, உறையூர் ரெட்டி நலச் சங்கத்தின் குடும்ப விழா 17.12.2023 ஞாயிறு அன்று காலை 10.30 மணிக்கு நடைபெற்றது. திருச்சி மாநகர ரெட்டி நலச் சங்கத்தின் செயலாளர் திரு.அ.ராஜாசிதம்பரம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். உறையூர் சங்கத்தின் வாயிலாக ரெட்டி நல டிரஸ்ட்டில் உறுப்பினர்களாகச் சேர்ந்தவர்களைப்பாராட்டி கௌரவப்படுத்தி தலைமை உரையை ஆற்றினார்கள்.

மாநகரச்சங்கத்தின் தலைவர் திரு.சீ.புண்ணியமூர்த்தி அவர்கள் 75 வயது நிறைவுற்ற மூத்தோர்களைப் பாராட்டிய பின், “பிறப்புக்கும், இறப்புக்கும் அப்பால்....” என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

சுபம் நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் திரு.பொ.சுந்தர்ராஜு அவர்கள் ‘வாழ்வில் வளம் பெற’ என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள்.

சங்கத்தின் பொருளாளர் திரு.ச.ரவிச்சந்திரன் வரவேற்புரை நல்கினார். தலைவர் திரு.ரா.நடராஜன் மாவட்ட சங்கத்தின் பொறுப்பாளர்களுக்குப் பொன்னாடை அணிவித்தார். செயலாளர் திரு.இரா.ஜனநாயகம் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது.





# குடியரசு தின விழாவில் விருது



நாமக்கல் நகர ரெட்டி நலச்சங்க செயலாளர் திரு.R.அன்பழகன் அவர்களின் மனைவி திருமதி.கோ.பிரேமலதா அவர்களுக்கு சிறப்பாக பணியாற்றியதற்காக கடந்த 26.01.2024 குடியரசு தினத்தன்று குடியரசு தின விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் விருது வழங்கி கௌரவித்தார். அவருக்கு ரெட்டி மலர் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

திருமதி.கோ.பிரேமலதா அவர்கள் தமிழ்நாடு அரசு பொதுப் பணித்துறையில் 30 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறார். பணியின் போது நேரம் தவறாமை, எடுத்துக்கொண்ட பணியினை சிறப்பாக செய்து முடிப்பதில் அர்ப்பணிப்புடன் செயல்படுவது, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு துறை ரீதியிலான விஷயங்களில் சரியான குறிப்புகளை உடனுக்குடன் வழங்குவதில் ஞானம் பெற்றிருப்பது, விடுப்பு எடுக்காமல் பணியாற்றியது உள்ளிட்ட காரணங்களுக்காக இவர் குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்த விருது பெற்றதைக்குறித்து திருமதி.கோ.பிரேமலதா அவர்களிடம் கேட்ட போது அவர் தெரிவித்தது, “மிகுந்த மன நிறைவையும், மகிழ்ச்சியையும் தருகிறது. இதற்கு எனக்கு உறுதுணையாக சக ஊழியர்களும், அதிகாரிகளும், என் குடும்ப உறுப்பினர்களும் இருந்தார்கள் என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். வாழ்த்து தெரிவித்தமைக்கு நன்றி என்றார்.

**ஊக்கம் தருபவர்கள் உடன் இருந்தால் தோற்கும் நிலை தூரப்போகும். சில சமயங்களில் எந்த உணர்வையும் வெளிப்படுத்தாமல் இருப்பதே சிறந்த பதிலாக அமைகிறது.**


## ரெட்டி மலர் சந்தா படிவம்

| சந்தாவிற்கான கால அளவு | சந்தா தொகை | (✓) டிக் செய்யவும் |
|---|---|---|
| 1 ஆண்டு | 180/- | |
| 3 ஆண்டு | 500/- | |
| 15 வருட சந்தா | 2500/- | |

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

தொலைபேசி : ..........................................................

நான் இத்துடன் ............ வருட சந்தா / 15 வருட சந்தா தொகை ரூ...................... டிடி / மணியார்டர் / காசோலை மூலம் Reddy Elainger Peravai (ரெட்டி இளைஞர் பேரவை) என்ற பெயரில் எடுத்து இணைத்துள்ளேன்.

நாள் : ______________ சந்தாதாரரின் கையொப்பம் : ______________________

**சந்தா தொகையை அனுப்ப வேண்டிய முகவரி**

**ரெட்டி மலர்**

எண். 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை – 600 083. 044 - 2485 3333, 9688877700.
E-mail Id : reddymalar06@gmail.com,
Website : www.reddymalar.com,
Twitter : @malar_reddy.twitter.com
Online Website : www.reddymalar.com

**ACCOUNT PAYEE :**
**REDDY ELAINGER PERAVAI**

BANK NAME : **INDIAN BANK**

BRANCH : **JAFFERKHANPET,**

A/C. NO. : **7105534900**

IFSC CODE : **IDIB000J019**

# நவீன விவசாயம் மற்றும் தொழில் வாய்ப்புகள்

இந்தியாவில் விவசாயத்துறையானது அதன் சமூகத்தின் முதுகெலும்பாக உள்ளது, மக்கள் தொகையில் 58 சதவீதம் பேர் வேலை செய்கிறார்கள் . உலகின் 4 சதவீதம் நீர்வளத்தையும், 2.4 சதவீதம் நிலப் பரப்பையும் கொண்டுள்ள இந்தியா, உலக மக்கள் தொகையில் 17.8 சதவீதத்தையும் கால்நடை மக்கள் தொகையில் 15 சதவீதத்தையும் ஆதரிக்கிறது. இந்தியா ஒரு உலகளாவிய விவசாய சக்தியாக உள்ளது. ஒரு மதிப்பீட்டின்படி, சுமார் 64 சதவீத மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் விவசாயத்துடன் இணைந்துள்ளனர். ஐடி மற்றும் மேலாண்மைத்துறையில் நல்ல வாய்ப்புகள் இருப்பதால், சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, மாணவர்கள் தொழில்ரீதியாக விவசாயத்துறையை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை, ஆனால் இப்போது இந்தத்துறையில் உள்ள புதிய வாய்ப்புகளைப்பார்த்து, விவசாயத் துறை அதிக லாபம் ஈட்டும் துறையாக உள்ளது.

விவசாயத்துடன் தொடர்புடைய முக்கிய தொழில்கள் :

## வேளாண் பொறியியல்

வேளாண் பொறியாளராக, வாங்கப்பட வேண்டிய இயந்திரங்கள், பண்ணைகளை கட்டமைத்தல், பாரம்பரியமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்களுக்கு மாற்றாக பரிந்துரைக்கும் பல்வேறு தனியார் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு ஆலோசனை சேவை–களை வழங்க அரசு மற்றும் தனியார் நிறுவனங்களால் நீங்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படலாம். விவசாய இயந்திரங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களில், நீங்கள் வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பராமரிப்பு போன்ற பல்வேறு துறைகளின் கீழ் பணி–யாற்றலாம்.

## தோட்டக்கலை

மலர் வளர்ப்பு, பூச்செடிகளை பயிரிடுதல், காய்கறிகள் பயிரிடுதல், இயற்கையை ரசித்தல், வணிக அல்லது குடியிருப்பு தோட்டங்கள் மற்றும் பூங்காக்களை வடிவமைத்தல் மற்றும் பராமரித்தல், திராட்சை பயிரிடுதல், பழங்கள் பயிரிடுதல் போன்ற தொழில்களை நீங்கள் ஆராயலாம். தோட்டக்கலை விஞ்ஞானியாக ஆராய்ச்சி துறையில் ஈடுபட்டு புதிய மற்றும் சிறந்த சாகுபடி முறைகளை உருவாக்க பங்களிக்கிறார். நீங்கள் சொந்தமாக தோட்டக்கலைத் தொழில் அல்லது நர்சரியைத் தொடங்கலாம் மற்றும் வணிக நோக்கங்களுக்காக பூக்கள், பழங்கள், காய்கறிகள் போன்றவற்றை வளர்க்கலாம்.

## பால் தொழில்நுட்பம்

B.Tech in Dairy Technology அல்லது B.Sc (Hons) Agriculture படித்தபிறகு, அமுல், வெர்கா, பராஸ் போன்ற பால் நிறுவனங்களில் பால் பண்ணை மேற்பார்வையாளராகப் பணிபுரியலாம் மற்றும் பால் உற்பத்தியின் பொறுப்பாளராக இருந்து தினசரி நடவடிக்கைகளைக் கண்காணிக்கலாம். வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக பிற வணிகங்களுடன் கூட்டு மற்றும் கூட்டு முயற்சிகளை உருவாக்கவும் நீங்கள் பணியாற்றலாம். இந்தத் துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை நடத்துவதற்கும் முன்னேற்றுவதற்கும் அரசு ஆராய்ச்சிநிறுவனங்கள் பால் விஞ்ஞானிக–ளாக தொழில்வல்லுநர்களைப்பயன்படுத்துகின்றன.




## கோழி வளர்ப்பு

இந்தத்துறையில் பட்டம் பெற்ற பிறகு, கோழிப் பண்ணை மேலாளர், வளர்ப்பவர், குஞ்சு பொரிப்பாளர், உதவியாளர், உற்பத்தித் தொழில்நுட்ப வியலாளர், தீவனத்தொழில்நுட்பவியலாளர், கோழிப்பண்ணை வடிவமைப்பாளர், செயலாக்கம் போன்ற வேலைகளைப் பெறலாம்.

## மீன் வள அறிவியல்

இத்துறை பட்டதாரிகள் மாநில மற்றும் மத்திய அரசுத்துறைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் மீன் பண்ணைகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளில் தொழில் வாய்ப்புகளைப்பெறலாம். அரசு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் மீன் வளர்ப்பு, மட்டி வளர்ப்பு, மீன் வளர்ப்பு தொழில்நுட்ப வல்லுநர், உயிரி அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர், மீன் ஆராய்ச்சி உதவியாளர் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்கின்றன.

## வேளாண்மை

இத்துறையில் வாய்ப்புள்ள பகுதிகள் – தாவர விஞ்ஞானிகள் அல்லது மண் விஞ்ஞானிகள், வேளாண் அமைச்சகத்தின் ஆராய்ச்சித் துறை அல்லது இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் (IARI) ஆகியவற்றுடன் இணைந்து, மண்ணின் வளம் மற்றும் தோட்டத்திற்கு ஏற்ற நிலைமைகளை ஆய்வு செய்தல், உற்பத்தி மற்றும் ஆலோசனைத் துறையில், பயிர்களின் கொள்முதல் மற்றும் விற்பனை மற்றும் விவசாயப்பொருட்களின் வர்த்தகம் போன்றவற்றில் நீங்கள் ஆலோசனை வழங்கலாம். விதை நிறுவனங்களுக்கான மாவட்ட விற்பனை மேலாளர், வேளாண் சார்ந்த நிறுவனங்களுக்கான பயிர் ஆலோசகர்கள் ஆகியோரின் பணிகளும் உள்ளன. அத்துடன் உரம் மற்றும் இரசாயன விற்பனையாளர்கள் ஆகலாம்.

## விவசாயப் பொருளாதாரம்

விவசாயப்பொருளாதார நிபுணர்களுக்கான தொழில் வாய்ப்புகள், விவசாய வங்கிகளில் கடன் ஆய்வாளர்களாக அல்லது விவசாயக்கடன் அதிகாரிகளாக பணிகள் உள்ளன. நீங்கள் பத்திரிகைகள், வர்த்தக இதழ்கள் அல்லது செய்தித்தாள்களுக்கு எழுத்தாளராகவும் பணியாற்றலாம் மற்றும் விவசாய ஆராய்ச்சி தொடர்பான கட்டுரைகளை வெளியிடலாம், விவசாய சந்தை எவ்வாறு செயல்படுகிறது? பல்வேறு விவசாய பொருட்களின்

தேவை மற்றும் விநியோகத்தின் போக்குகள், அவற்றின் விலை, ஏற்ற இறக்கம் போன்றவற்றை நீங்கள் தொடரலாம். நீங்கள் பி.எச்.டி பெற்று இந்தத் துறையில் விரிவுரையாளராகுங்கள். இதுத் தவிர, பொருளாதார நிபுணர்களும் அரசாங்கத்துடன் இணைந்து விவசாயத் தரவுகள் மற்றும் புள்ளி விவரங்களைச்சேகரித்து ஆய்வு செய்து, கண்டறிந்து, வேளாண் சந்தைக்கான கணிப்புகளைச் செய்கிறார்கள்.

### வேளாண் வணிக மேலாண்மை

இந்தத்துறையில் பட்டப்படிப்பைத் தொடர்ந்த பிறகு, நீங்கள் வேளாண் வணிக நிறுவனங்கள், விவசாய சந்தைப்படுத்துதல் முகமை, உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் சில்லறை வணிகத்தொழில்களில் வேலைகளை ஆராயலாம். நீங்கள் ஒரு வேளாண் வணிக சந்தைப்படுத்துதல் ஒருங்கிணைப்பாளராக பணிபுரியலாம் மற்றும் வேளாண்பொருட்களின் சந்தைப்படுத்துதல் மற்றும் விற்பனையை கையாளும் பொறுப்பாளராக இருக்கலாம். வாங்கப்பட்ட மற்றும் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம் தரநிலைகளின்படி இருப்பதை உறுதிப்படுத்த நீங்கள் ஒரு தரக் கட்டுப்பாட்டாளராகவும் இருக்கலாம். வணிகத் திட்டமிடல் மேலாளர், வணிக மேம்பாட்டு நிர்வாகி மற்றும் வேளாண் ஆய்வாளர் ஆகியோர் இந்தத் துறையில் பணியாற்றலாம்.

### விவசாய உயிரி தொழில்நுட்பம்

இந்தத் துறையில் மருந்து அல்லது இரசாயன நிறுவனங்கள் மற்றும் விவசாயம் சார்ந்த உற்பத்தி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புகளை உங்களுக்கு வழங்க முடியும். விதைகள், பூச்சிக்கொல்லிகள் போன்ற உற்பத்திப் பொருட்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஒரு தயாரிப்பு மேம்பாட்டு விஞ்ஞானியாக இருக்கலாம். நீங்கள் அத்தகைய நிறுவனங்கள் அல்லது IARI போன்ற நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறையிலும் பணியாற்றலாம். மற்றும் ஏற்கனவே உள்ள வேளாண் பொருட்களை மேம்படுத்த அல்லது புதிய மற்றும் சிறந்த தரமான பொருட்களை உருவாக்க புதிய செயல்முறைகளை கொண்டு வருவதில் பங்களிக்கலாம்.

**வேண்டியதில் மட்டும் கவனம் செலுத்தினால், வேண்டாதது எல்லாம் தானாக விலகிவிடும்...!**

## 2024ல் அனைத்து பெண்களுக்கும் மருத்துவரின் ஆலோசனை

ஆலோசனைகள் மிகவும் எளிமையானதாகத் தெரிகிறது, ஆனால் இவை மிக ஆழமான நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்!

ஒரு மருத்துவர் பெண்களுக்கு சில ஆலோசனைகளை வழங்க முடிவு செய்தார். அறிவுரை எளிமையானது மற்றும் தெளிவானது. 2024ம் ஆண்டில் அனைவரும் ஆரோக்கியமாகவும் சிறப்பாகவும் வாழ ஒவ்வொரு பெண்களிடமும் இதைப் பகிரவும்.

1. ஒரே நாளில் அனைத்து வீட்டு வேலைகளையும் முடிக்கமுடியாது. அவ்வாறு செய்தவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டுள்ளனர் மற்றும் சிலர் ஏற்கனவே புதைக்கப்பட்டுள்ளனர்.
2. ஓய்வெடுக்க நேரம் ஒதுக்குங்கள். கீழே உட்கார்ந்து, உங்கள் கால்களை நீட்டி புத்தகத்தைப் படிக்கும் போதோ அல்லது ஓய்வெடுக்கும் போதோ பாப்கார்னை கொறிப்பதில் எந்த தவறும் இல்லை.
3. தலைவலி வந்தால் ஓய்வெடுங்கள். தேவையென்றால் தூங்குங்கள், அந்த தலைவலி போய் விடும். விடுமுறை எடுக்க மறுப்பவர்கள் அல்லது ஓய்வெடுக்கவிடாமல் அவர்களின் குடும்பத்தினர் மறுத்தால் அவர்கள் உங்களை இழக்கிறார்கள்.
4. தூக்கமருந்துகளை உட்கொள்வதை நிறுத்துங்கள், உங்கள் மூளை மற்றும் உறுப்புகளை அழிக்கிறீர்கள். ஒரு கட்டத்தில் நீங்கள் விஷயங்களை மறக்க ஆரம்பிக்கிறீர்கள். மூளையை ரிலாக்ஸ் செய்யுங்கள், குறைவாக கவலைப்படுங்கள், குறைவாக சிந்தியுங்கள், அதிகமாக சிரியுங்கள். எல்லாம் காலப்போக்கில் கடந்து செல்கிறது.
5. சில சமயங்களில் அமைதியாக வெளியே தனியாக உட்கார்ந்து, எதுவும் செய்யாமல், எதுவும் பேசாமல் அமைதியான காற்றை சுவாசிக்கவும். அவசரம் வேண்டாம்.
6. நீங்கள் உங்கள் கண்ணாடியின் அருகே நின்று, உங்களைப்பார்த்து புன்னகைக்கவும், நடனமாடவும், பாடவும் அது உங்களைச் சுற்றி ஒரு நேர்மறையான ஒளியை உருவாக்கும், அதனால் நீங்கள் பிரகாசிக்க முடியும்.
7. ஒரு சிற்றுண்டி அல்லது ஒரு பானத்தை நீங்களே தேர்வு செய்து சாப்பிடவும். உங்களுக்காக ஏதாவது செய்து சாப்பிடுங்கள்.
8. உங்கள் வேலையை எளிதாக்கவும் மன அழுத்தத்தைத் தவிர்க்கவும் உங்கள் வீட்டிற்குத் தேவையானவைகளை நீங்களே தேர்வு செய்து வாங்குங்கள். மன அழுத்தம் பெண்களின் மிகப் பெரிய அமைதியான கொலையாளி.
9. உங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றால், சுகாதார மையம், மருத்துவமனைக்குச் செல்லுங்கள் அல்லது அருகிலுள்ள செவிலியரை அழையுங்கள். அமைதியாக உட்கார வேண்டாம். உங்கள் வாழ்க்கை முக்கியம்.
10. நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்கள் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவை அவ்வப்போது சரிபார்க்கவும். இது கடந்த காலத்தில் பல பெண்களை காப்பாற்றியுள்ளது. நம்புங்கள்.

இந்த தகவலை அனைத்து பெண்களுடனும் பகிர்ந்து கொள்ள மறக்காதீர்கள், மேலும் அவர்களும் 2024 ஆம் ஆண்டை நல்ல ஆரோக்கியத்துடனும் அனுபவிக்கட்டும்.

பெண்களே, இது நம் அனைவருக்கும் ஒரு நினைவூட்டல். நாம் முக்கியமானவர்கள், நம்மை நாமே கவனித்துக் கொள்ள வேண்டும்.

# கீதையின்படி தொழில்கள் புரிவோம்

பகவத் கீதை என்றவுடன் இக்கட்டுரை முற்றிலும் ஆன்மீக தொடர்புடையது என எண்ண வேண்டாம். இன்றைக்கும் நம் வாழ்க்கை மேம்பட பல கருத்துகள் கீதையில் உள்ளன. எனினும் ஒரு சில கருத்துகள் காலம் கடக்கும்போது பயனில்லாமல் நின்று போகின்றது. நமது அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்ட 75 ஆண்டுகளுக்குள் மாற்றங்கள் சில காணும்போது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கீதையின் 700 ஸ்லோகங்களில் ஒரு சில பயனில்லாமல் நின்று போவது இயல்பானது. அவற்றை உருப்பெருக்கி மூலம் பெரிதாக்கி ஆய்வு செய்யாமல், பயனுள்ள ஏராளமான கருத்துகளை நாம் பயனில் கொள்வோம். தொழில் பற்றிய கீதையிலுள்ள கருத்துகளை இங்கு காண்போம்.

### ஓயுதல் இல்லை, தொழில் செய்

"பார்த்தா, மூன்றுலகத்தில் எனக்கு யாதொரு கடமையும் இல்லை. நான் பெற்றிராத பேறும் இல்லை. எனினும் நான் தொழிலிலே தான் இயங்குகிறேன்" [அத்.3,சுலோ.22] என்று கிருஷ்ண பகவான் கூறுகிறார். எவரும் ஒரு கணப் பொழுதேனும் செய்கையின்றி இருப்பதில்லை. அதனால் மனிதன் தொழில் செய்துதான் தீர வேண்டும்.

இறைவனை அடையும் வழிகளான துறவு, கர்ம யோகம் இவ்விரண்டும் உயர்ந்த நலத்தை தருவன. கர்மயோகம் என்பது தொழிலை சிரத்தையுடன் செய்து அடையும் வழி. இவற்றுள் கர்ம துறவைக் காட்டிலும் கர்மயோகம் மேலானது என்கிறார் கிருஷ்ணர் [அத்.5, சுலோ.2]. ஆகவே செய்யும் தொழிலே தெய்வம். சிரத்தையுடன் செய்வதே இறைவனை அடையும் வழி. எத்தொழில் செய்யினும் பேதம் இல்லை. தொழில்கள் என்பன உடலாலும், மனதாலும் செய்யும் அனைத்து காரியங்களும் அடங்கும். இதில் கல்வி கற்றல், வீட்டுப்பணிகளில் தொடங்கி வருவாய் ஈட்ட கூடிய செயல்கள், சேவை செயல்கள் என அனைத்தும் அடங்கும். எத்தொழில் செய்தாலும் கீதையின் கருத்துக்களின்படியே செய்வது பலன்கள் பல தரும்.

வருவாய் தரும் தொழில் என்பதில் அரசு, அரசு சார்ந்தவை மற்றும் பெரிய கம்பெனிகளில் மாத ஊதியத்தில் பணிபுரிவோர்க்கு வாழ்க்கை ஒரே சீராக செல்லும், இதர தொழில்புரிவோர்களுக்கு வாழ்க்கைப் பாதையில் மேடு பள்ளங்கள் அதிகம்.

### தொழிலுக்கான தகுதி பெறு

"யோகஸ்த: குருகர்மாணி", அதாவது யோகத்தில் நின்று தொழில்களை செய் என கிருஷ்ணர் கூறுகிறார். தொழிலுக்குத்தன்னைத் தகுதியுடையவனாக செய்து கொள்வதே யோகம் எனப்படும். தொழில் தொடர்பான விஷயங்களை கவனிக்குமிடத்து மனதில் எவ்வித சஞ்சலம், பயம் மற்றும் சலிப்பின்றி அவற்றில் ஆழ்ந்து மனம் முழுமையும் வயப்படுத்தி கவனிப்பதாகிய பயிற்சி இது. முடிவில் அத்தொழிலுக்கு நம்மை முழு தகுதியாக்கி கொள்வதே ஆகும்.

### பயனில் பற்றின்றி தொழில் செய்

அடுத்து தொழில் செய்யும்போது திட்டமிட்டு முயற்சிப்பதும், செயல்படுவதும் நம் கட்டுப்பாட்டில் உள்ளன. முடிவு நம் கட்டுப்பாட்டில் இல்லாதபோது அதனைப்பற்றி கவலைப்படுவது வீண். இறைவனிடம் முடிவை விட்டுவிடுவோம். பயமின்றி இருப்போம் [அத்.2 சுலோ.47]. உதாரணமாக புது ஓட்டல் ஒன்று தொடங்குகிறோம் அல்லது குழந்தையை நல்ல பள்ளியில் சேர்க்கிறோம். மேலும் இவற்றிற்கு தேவையான அனைத்து வசதிகளையும் செய்கிறோம். பிறகு நாளை ஓட்டலில் நல்ல லாபம் வருமா, குழந்தை நன்றாக படிப்பானா என்ற கவலைகள் எல்லாம் நமக்கு எதற்கு? நாளை நடப்பதை இறைவனிடம் விட்டு விடுவோம்.

ஒருவர் பஸ் கம்பெனி ஒன்றை நடத்துகிறார். தனக்கு கீழ் ஒரு மேனேஜரை வைத்து நிர்வாகம் செய்கிறார். பெரும் லாபமோ, மோசமான நஷ்டமோ வரும் சமயங்களில் துள்ளி குதித்தலும், துவண்டு போவதும் முதலாளியிடம் இயல்பாக இருக்கும். அனைத்தும் தெரிந்து செயல்படுத்தும் மேனேஜருக்கு மகிழ்ச்சியும் துயரமும் அந்த அளவு இல்லாமல் ஏதோ ஓரளவு இருக்கும். அதுபோல் நாம் செய்யும் தொழிலுக்கு முதலாளி இறைவனே, நாம் மேனேஜர் மட்டுமே என்ற எண்ணம் வேண்டும். இவ்வாறு பொறுப்புகளை இறைவனிடம் ஒப்படைப்பதால் நமக்கு மனக்கவலைகளும், பயமும் வருவதில்லை. இதை கிருஷ்ணர் கீதையில் [அத்.3 சுலோ.30] பின்வருமாறு கூறுகிறார். "எல்லா செய்கைகளையும் உள் அறிவினால் எனக்கு அர்ப்பணமாக துறந்து விட்டு ஆசையை நீக்கி, 'எனது' என்பது அற்ற மனகாய்ச்சல் தீர்ந்தவனாய் [போர்] தொழில் செய்யக்கடவாய்".

### நமது டிரைவர் இறைவனே

தொழில் செய்யும் போது அகங்காரத்தில் மயங்கியவன் 'நான் செய்கிறேன்' என்கிறான். எங்கும் தொழில்கள் இயற்கையின் குணங்களால் செய்யப்படுகின்றன [அத்.3 சுலோ.27] அண்ட சராசரம், நட்சத்திரங்கள், கோள்கள், உயிரற்றவை, உயிருள்ளவை என அனைத்தும் இயக்கத்தில் உள்ளன.

விழுப்புரத்திலிருந்து சென்னைக்கு ஒரு பஸ் நேற்று மூன்று மணி நேரத்திலும், இன்று அதே பஸ் இரண்டரை மணி நேரத்திலும் வருகிறது என கொள்வோம். விரைவாக வருகிறது என்றால் அதற்கான பாராட்டு யாருக்குச்சேரும் டிரைவருக்கா அல்லது பஸ்சுக்கா? டிரைவருக்கு தான் அந்தப் பாராட்டு. நம் வாழ்விலும் நாம் செய்யும் சாதனைகள் நம்மை இயக்கும் டிரைவரான இறைவனுக்கு தான் சேரும். பஸ்ஸில் உள்ள டீசல் பம்பு, எஞ்சின், கீர்பாக்ஸ், சக்கரங்கள், பிரேக் போன்ற பாகங்களைப் போல் நம்மிலும் உரிய மரபு ஜீன்களின் பின்பலத்துடன் உடல், மனம், அறிவுத்திறன், செயல்படுத்தும் திறன் என பல பகுதிகள் உள்ளன. இவைகளும் இயற்கையான குணங்களால் இயங்குகின்றன. அதாவது இப்பண்புகளைப் பெற்றிருக்கும் எந்த ஒரு நபரும் சாதிக்கமுடியும். ஆகையால் ஆன்மாவில் இருக்கும் இறைவனாகிய

டிரைவரே நம் வெற்றிக்கு காரணம். இதற்கு மனம் ஆன்மாவோடு இசைந்து செல்லவேண்டும். நமது ஆன்மீக பூமியில் சுமார் 40, 50 ஆண்டுகளுக்கு முன்பு வரை 'இது யாருடையது' என்றால் பதிலாக 'நம்ம வீடு, நம்ம நிலம்' என்று தான் சொல்வார்கள். 'எனது' என்ற வார்த்தை வராது.

**ரெட்டியார்களின் வாழ்வாதார சூழல் மாற்றம்**

பல நூற்றாண்டுகளாக விவசாயத்தை திறம்பட நிர்வகித்து வந்த ரெட்டியார்கள் அத்தொழிலை விட தொடங்கிவிட்டனர். பலர் அருகில் உள்ள நகரங்களுக்கு இடம் பெயர்ந்து, கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களை பராமரித்து வருகின்றனர். அநேகமாக அடுத்த தலைமுறை யினர் அந்த விவசாய நிலங்களையும் விற்று விடலாம். ஒருவர் கூட கிராமத்தில் இருக்கப் போவதில்லை. இச்செயல் சரியா, தவறா அல்லது காலம் தாழ்ந்த செயலா என்பதனை இங்கு விவாதத்திற்கோ அல்லது ஆய்வுக்கோ எடுத்துக் கொள்ளவில்லை. விற்ற பணத்தைக்கொண்டு நகரங்களில் மனைகளை வாங்கி போட்டுவிட்டு ஏதோ காலத்தை கழிக்கப்போகிறார்கள்.

ரெட்டி(யார்) என்பது குலத்தின் பெயர் மட்டுமல்ல, நிர்வாக பதவியின் பெயர் என்று கூறும் வரலாற்று வல்லுனர்களும் உள்ளனர். இப்படி பரம்பரையாக நம்மில் வரும் நிர்வாகத் திறமைகளை வீணடிக்காமல் ஏதாவது தொழில்கள் செய்து நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை செய்யலாம் அல்லவா? மனமும் உடலும் வளம் பெறுமன்றோ? தனியாகவோ, தேவைப்பட்டால் கூட்டாகவோ தொழில்கள் செய்யலாம். நாடும் தனியார் மயம் நோக்கி செல்கிறது. 1960, 70-களில் தேசிய மயமாக்கப்படுதல் மேலோங்கி இருந்தது. வங்கிகள் நாட்டுடமை ஆக்கப்பட்டன. தற்போது நாடு தனியார்மயம் நோக்கி நகர்கிறது. ரயில்வே, ராணுவத்தில் கூட தனியார் தொழில்கள் உற்பத்தி காணப்படுகிறது. எனவே தொழில்கள் தொடங்க இதுவே சரியான தருணம்.

விவசாயத்தை விட்டு வெளியேறும் ரெட்டி(யார்) இனம் தொழில்கள் செய்வது குறித்து வரும் ஆண்டுகளில் தீவிரமாக யோசிக்க வேண்டும், திட்டமிடவேண்டும், செயல்படுத்த வேண்டும். ரெட்டி சங்க அமைப்புகளும் இச்செயல்பாடுகளில் தீவிரமாக உதவிபுரிய வேண்டும். தமிழகத்தில் தொழில்களின் தேவைபடும் விதம், மூலப் பொருட்கள் கிடைக்கும் தன்மை, உரிய பணி–யாளர்கள் தேவை, உற்பத்திப்பொருட்களுக்கான விற்பனை சந்தைகள், அரசு அளிக்கும் சலுகைகள், மான்யங்கள், கடன்வசதி அமைப்புகள் போன்றவை பற்றிய விவரங்களை உரிய அரசு அலுவலர்கள், வல்லுனர்கள் வழியாக பெறுவதற்கு தொடர் கூட்டங்கள் மற்றும் சந்திப்புகளை அந்தந்த பகுதியில் உள்ள ரெட்டி நல சங்க அமைப்புகள் ஏற்பாடு செய்யலாம். நம் மக்கள் தெளிவு பெறுவார்கள். தொழில்முனைய ஆர்வம் காட்டுவார்கள். பொருளாதார உற்பத்தியில் நமது பங்களிப்பு எப்போதும் மேலோங்கியே இருக்கட்டும்.

கீதையின் கருத்துகளின்படி ஓயுதல் செய்யோம், தொழில்கள் துவங்க தகுதிகள் பெறுவோம், பலனில் பற்றின்றி இறைவனிடம் விட்டுவிட்டு அகந்தையின்றி தொழில்கள் புரிவோம். தொழில் முனைவோரை ஆதரிப்போம். சமூகத்தில் பலம் சேர்ப்போம்.

**Reddy is always an asset, never liability in Society.**

சமுதாயத்தில் ரெட்டியார்கள் எப்போதும் கொடையாளியாகவே இருப்பார்கள். சுமையாக அல்ல.

திரு R.இராஜசேகரன், விழுப்புரம்.



# உடல் உறுப்புகளும் பலப்படுத்தும் உணவுகளும்



**மூளை :**



- கறிவேப்பிலைத் துவையலை 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் மூளையின் செயல்பாடு சீராகி, நாம் சுறுசுறுப்புடன் இருப்போம்.
- குறைந்தது ஆண்டுக்கு இருமுறையாவது கைகளில் மருதாணி வைத்தால், மனம் தொடர்பான கோளாறுகள் நீங்கும், அதன் குளிர்ச்சி மூளைக்கு ஓய்வைத் தரும்.
- வல்லாரை இலைகளை நெய்யில் வதக்கி சுடு சாதத்துடன் இரண்டு கவளம் சாப்பிட்டு வர வேண்டும்.

**கண்கள் :**

- பாலுடன் குங்குமப்பூ சேர்த்துக் குடித்து வருவது நல்லது.
- தினமும் 50 கிராம் அளவுக்கு மாம்பழம் அல்லது பப்பாளியைச் சாப்பிட்டு வர பார்வைத்திறன் மேம்படும்.
- அரைக்கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் கண்கள் குளிர்ச்சியடையும். அதுபோல பொன்னாங்கண்ணி, முருங்கைக்கீரை சாப்பிட்டாலும் பார்வைத்திறன் மேம்படும்.
- வெண்டைக்காய் மோர்க்குழம்பு, வெண்டை மசாலா, வெண்டைக்காய் பொரியல் என சாப்பிட்டால் கண்களுக்கு நல்லது.
- தினந்தோறும் நெல்லிக்காய் ஜூஸ் குடித்து வந்தால், கண் தொடர்பான பிரச்சனைகள் வராது.

**பற்கள் :**

- மாவிலைப்பொடியை பற்பொடியாகப் பயன்படுத்தி பல்தேய்த்து வந்தால் பற்கள் உறுதியாகும்.
- கோவைப்பழம் சாப்பிட்டால் பல் தொந்தரவுகள் வராது. உணவிலும் அடிக்கடி கோவைக் காயைச் சேர்த்துக் கொள்ளலாம்.
- செவ்வாழைப்பழத்தை தினமும் இரவில் சாப்பிட்டு வர பல்லில் ரத்தக்கசிவு, பல் சொத்தை ஆகியவை வராது.
- பல் உறுதியாக, உணவை நன்றாக மென்று சுவைக்க வேண்டும். கேரட், கரும்பு, ஆப்பிள் போன்றவற்றைப்பத்து முறையாவது நன்றாக மென்று சாப்பிட வேண்டும்.

**நரம்புகள் :**

- சேப்பங்கிழங்கை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் நரம்புகள் பலம் பெறும்.
- இரண்டு அத்திப்பழத்தை தினந்தோறும் சாப்பிட்டு வரலாம்.
- மாதுளைப் பழச்சாற்றில் தேன் கலந்து 48 நாட்கள் குடித்து வரலாம்.
- இலந்தைப்பழத்தை அவ்வப்போது சுவைத்து வரலாம்.
- கரிசலாங்கண்ணிக்கீரையை அடிக்கடி சாப்பிட்டு வருவது நல்லது.

**இரத்தம் :**

- வாரம் இரண்டு நாட்கள் பீட்ரூட் ஜூஸ் குடிப்பதால் இரத்த உற்பத்தி கூடும்.
- திராட்சைப்பழ ஜூஸ் ஒரு டம்ளர் அல்லது ஒரு ஸ்பூன் இஞ்சிச்சாற்றில் சிறிது தேன் கலந்து குடித்து வந்தால் இரத்தம் சுத்திகரிக்கப்படும்.
- தினம் ஒரு கப் அளவுக்கு தயிர் சாப்பிட்டு வந்தால், இரத்தக்குழாய் அடைப்புகள் நீங்கும்.
- அடிக்கடி விளாம்பழம் சாப்பிட்டு வந்தால், இரத்தத்தில் உள்ள கிருமிகள் அழியும்.
- இரண்டு லிட்டர் நீரைக்கொதிக்க வைத்து, அதில் சீரகத்தைப்போட்டு 10 மணி நேரம் கழித்து, அந்தத் தண்ணீரை நாள் முழுவதும் குடித்து வந்தால் இரத்தம் சுத்தமாகும்.

**சருமம் :**

- தேகம் பளபளப்பாக மாற ஆவாரம் பூ டீ குடித்து வரலாம். ஆரஞ்சுப்பழத்தையும் சாப்பிட்டு வரலாம்.
- முட்டைக்கோஸ் சாற்றை முகத்தில் தடவி வர முகத்தில் ஏற்படும் சுருக்கங்கள் மறையும்.
- சந்தனக்கட்டையை இழைத்து அதனுடன் எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் பூசினால் பருக்கள் நீங்கும். முகம் பிரகாசமாகும்.
- ஆரோக்கியமான உடல், பொலிவான முகம், பளபளப்பான சருமம் பெற அருகம்புல்லை நீர் விட்டு அரைத்து வெல்லம் சேர்த்து வாரம் மூன்று முறைக் குடித்து வரவேண்டும்.

**நுரையீரல் – இதயம் :**

- தேனில் ஊறவைத்த நெல்லிக்காயை தினசரி சாப்பிட்டு வர நுரையீரல், இதயம் பலமாகும்.
- கரிசலாங்கண்ணிக் கீரையை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் நல்லது.



- ஆர்கானிக் ரோஜாப்பூ, பனங்கற்கண்டு, தேன் ஆகியவற்றை லேகியம் போல கலந்து, தினமும் ஒரு ஸ்பூன் சாப்பிட்டு வர இதயம் பலமாகும்.
- இஞ்சி முரப்பா, இஞ்சி சாறு, இஞ்சித் துவையல் ஆகியவற்றைச்சாப்பிட்டால் இதயம் ஆரோக்கியமாக துடித்துக் கொண்டிருக்கும்.
- சுண்டை வற்றலை உணவில் அடிக்கடி சேர்த்துக்கொண்டால் நுரையீரல் ஆரோக்கியத்துடன் இருக்கும்.

- திராட்சை ஜூஸ், உலர் திராட்சையை சாப்பிட இதயம் பலம் பெறும்.
- முள்ளங்கிச்சாற்றை அரை கப் அளவுக்கு மூன்று வாரங்களுக்கு குடித்து வருவது நல்லது. இதனால் நுரையீரல் தொடர்பான பிரச்சனைகள் நெருங்காது.
- ஆளிவிதைகள், பாதாம், வால்நட் ஆகியவற்றில் ஒமேகா 3, நல்ல கொழுப்பு இருப்பதால் இதயத்துக்கு நல்லது.



**வயிறு :**

- காலையில் எழுந்ததும் ஊறவைத்த ஒரு டீஸ்பூன் வெந்தயத்தை சாப்பிட்டு சிறிதளவு தயிரையும் குடிக்க வேண்டும். வயிறு சுத்தமாகும்.
- மாதுளம்பூவை தேநீராக்கிக்குடித்து வந்தால், வயிறு தொடர்பான பிரச்சனைகள் நீங்கும்.
- வறுத்துப் பொடித்த சீரகத்தை ஒரு டம்ளர் மோரில் போட்டுக் குடிக்க வேண்டும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஒரு டம்ளர் தேங்காய்பாலுடன் கருப்பட்டி சேர்த்துக் குடித்து வருவதால், வயிறு தொடர்பான பிரச்சனைகள் எதுவும் வராது.
- சுரைக்காயை வாரம் இருமுறை உணவில் சேர்த்துக்கொள்ள தொப்பை கரையும்.
- வாழைப்பூ, மணத்தக்காளிகீரையை வாரம் ஒருமுறையாவது சாப்பிட வயிற்றுத் தொந்தரவுகள் நீங்கும்.
- வாரம் ஒருமுறை கொள்ளு ரசம் சாப்பிட கெட்ட கொழுப்பு கரையும், தொப்பையும் குறையும்.

**கல்லீரல் – மண்ணீரல் :**

- கரிசலாங்கண்ணிக்கீரையைக்கூட்டாக செய்து சாப்பிடலாம். கீழாநெல்லியை புளியங் கொட்டை அளவு வெறும் வயிற்றில் மாதந் தோறும் ஐந்து நாளைக்குச் சாப்பிட வேண்டும்.
- மாதத்தில் இரண்டு நாட்கள் வேப்பம்பூ ரசம் வைத்துச் சாப்பிடுங்கள்.
- திராட்சை பழச்சாற்றை அருந்தி வந்தால் கல்லீரல், மண்ணீரல் உறுப்புகளுக்கு நன்மையைச் செய்யும்.

**மலக்குடல் :**

- அகத்திக்கீரையை வாரம் ஒருநாள் சமைத்துச் சாப்பிடவேண்டும். இதனால் மலக்குடல் சுத்தமாக இருக்கும்.
- பப்பாளிப்பழத்தை வாரம் மூன்று முறை சாப்பிடுவது நல்லது.
- அடிக்கடி முளைக்கீரையை சமையல் செய்து சாப்பிட்டு வரலாம்.
- மாலை ஆறு மணி அளவில், மாம்பழ சீசனில் மாம்பழத்தைத் தொடர்ந்து சுவைத்து வரலாம்.
- மாதுளைப்பூ சாறு 15 மி.லி. சிறிதளவு பனங்கற் கண்டு சேர்த்து மூன்று வேளையும் குடித்து வரவேண்டும்.

**பாதம் :**

- விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய் சம அளவு எடுத்து பாதத்தில் தடவி வந்தால் பாதம் மிருதுவாக இருக்கும். லேசாக சூடு செய்த வேப்பெண்ணெயை விரல்களின் இடுக்கில் தடவினால் சேற்றுப் புண்கள் சரியாகும்.
- வாழைப்பூவைபருப்பு சேர்த்துச்சமைத்து சாப்பிட்டு வந்தால், கை, கால்களில் வரும் எரிச் சல் நீங்கும்.

**“உங்கள் வருங்காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். உங்கள் நிகழ்காலத்தில் நல்லவிதமாக செயல்பட்டால் உங்கள் வருங்காலம் தன்னால் மலரும்”.**


ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

**ரெட்டி திருமணத் தகவல் மையம்**

**எண் : 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.**
**044 - 2485 3333, 9688877700, E-mail Id : reddymatrimonired@gmail.com**
**For Online Registration Website : www.reddymatrimony.co.in**

நிறைவான சேவைக்கு சரியான சாய்ஸ் இம்மையம்.
வேலை நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
[வார விடுமுறை கிடையாது]


## அருமையான கதை

“இரப்பரைப் பார்த்து பென்சில் கேட்கிறது, ‘ஒவ்வொரு முறை நான் செய்யும் தவறுக்கும் என்னை சுத்தப்படுத்தி தூய்மையாக்கிவிடுகிறாய், ஆனால் என்னை சுத்தம் செய்யும் போது நீ கரைந்துக்கொண்டே போகிறாயே, அது எனக்கு வருத்தமாக இருக்கிறது’ என்று. இரப்பர் அதற்கு ‘என்னைக் கண்டு நீ வருந்த வேண்டாம். இதில் எனக்கு முழு மகிழ்ச்சி. என்னால் உன் தவறுகள் அழிக்கப்பட்டு, நீ திருத்தங்களுடன் முன்னேறி சென்றால் அதுவே என் வெற்றி, நான் கரைவதைப் பற்றி எனக்கு கவலை இல்லை’ என்றது. அந்த இரப்பர் வேறு யாருமில்லை நம் பெற்றோர்கள் தான். அவர்கள் ஆயுள் முடியும் வரை நம் தவறுகளை திருத்திக்கொண்டே இருப்பார்கள்.... நம் மீது பொறாமைப்படாத இரு உள்ளங்கள் நம் பெற்றோர்கள்.

# NATIONAL ENGINEERING COLLEGE

(An Autonomous Institution - Affiliated to Anna University, Chennai)
K.R. NAGAR, KOVILPATTI – 628503
+91 9385976674 / +91 9385976684 / 04632 - 222502 www.nec.edu.in principal@nec.edu.in

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

TNEA COUNSELLING CODE **4962**

# COURSES OFFERED

## UG

- B.E. - Mechanical Engineering *
- B.E. - Electronics & Communication Engineering *
- B.E. - Computer Science and Engineering *
- B.E. - Electrical & Electronics Engineering *
- B.Tech. - Information Technology *
- B.E. - Civil Engineering
- B.Tech. - Artificial Intelligence and Data Science

## PG

- M.E. - Energy Engineering
- M.E. - Embedded Systems Technologies
- M.E. - Computer Science and Engineering
- M.E. - High Voltage Engineering
- M.Tech. - Information Technology (Information and Cyber Warfare)

## PLACEMENT STATUS

For 2022 Batch
**95%** Placement

For 2023 Batch
**200+** Offers
**175+** Internship Offers
as on 05th September 2022

## ON CAMPUS INDUSTRY

Mistral Solutions, Bangalore
Brimma Tech, USA

95% CONSISTENT PLACEMENT
150+ COMPANIES
625+ OFFERS
15 LPA HIGHEST SALARY



## NEC Special Features

- ARIIA 2021 Band - Excellent, 10th Rank (All India Level) Under Private or Self Financial Technical Institutes Category
- Institution's Innovation Council (Ministry of Education Initiative) 4 STAR RATING
- nirf Rank - 169
- DST - FIST Sponsored
- Accredited with Grade A NAAC
- K.R. Innovation Centre
- NBA Accredited*
- NewGen IEDC, DST, New Delhi

## FEW OF OUR PRESTIGIOUS RECRUITERS

amazon, TATA Consultancy Services, ZOHO, Cognizant, accenture, Infosys, HCL, VVDN Technologies, Tessolve, wipro, Data Patterns, Mistral, Brakes India Private Limited, Capgemini, Centizen, Elite Constructions, embedUR, vuram, HEXAWARE, Tech Mahindra

# Lakshmi Ammal Polytechnic College

(Approved by AICTE, New Delhi and Directorate of Technical Education, Tamil Nadu)
Ph: 04632 - 222506, 63819 20408 352lapc@gmail.com / principal@lapc.in www.lapc.in.

39 YEARS OF ACADEMIC EXCELLENCE 2022 - 2023

**COURSES OFFERED**

- Civil Engineering
- Mechanical Engineering
- Automobile Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering

# K.R. College of Arts & Science

Ph: 04632 - 248 981, 222 981 principal@krcollege.net www.krcollege.net


**COURSES OFFERED**

**UG**
B.A. - English   B.Com. - Professional Accounting
B.Sc. - Computer Science, Bio Chemistry, Micro Biology & Mathematics

**PG**
M.Sc. - Computer Science
M.Sc. - Micro Biology

# Kayaar Exports Private Limited

KR (Spinning Unit)
Railway Feeder Road, K.R.Nagar, Kovilpatti - 628 503, Thoothukudi Dist, Tamil Nadu, India
Ph: 04632-222510, 248258, 94425 38774 ttn_krgroup@yahoo.com, ttnkrgroup@gmail.com




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in

## மணமகள்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | G 7219 | 18.08.2000 | B.Com. MBA | உத்திரட்டாதி | —— | —— |
| 2 | G 7220 | 03.10.1995 | MBBS, MD | திருவோணம் | Doctor | Rs.50,000/- PM Stipend |
| 3 | G 7221 | 24.06.1995 | B.E. | பரணி | Software Engineer | Rs.10-12 Lakhs / PA |
| 4 | G 7222 | 09.07.1996 | B.Com. | அஸ்வினி | Lead Associate | Rs.5 Lakhs / PA |
| 5 | G 7223 | 24.06.1997 | B.Tech. MBA | அவிட்டம் | —- | —- |
| 6 | G 7224 | 21.03.2001 | M.Sc. MBA, B.Ed. | அவிட்டம் | —- | —- |
| 7 | G 7225 | 20.02.1999 | D.Ed., B.Ed., MA. | ரேவதி | Private Teacher | Rs.20,000/- PM |
| 8 | G 7226 | 15.10.1994 | M.Sc. MBA | அவிட்டம் | HDFC Bank Deputy Manager | Rs.10 Lakhs / PA |
| 9 | G 7227 | 14.08.1994 | B.Com. MBA | விசாகம் | Software | Rs.40,000/- PM |
| 10 | G 7228 | 02.02.1997 | B.Tech. M.Tech. Ph.D. | அனுஷம் | Assistant Professor | Rs.50,000/- PM |
| 11 | G 7229 | 12.11.1996 | B.E. | விசாகம் | Private Sector | Rs.65,000/- PM |
| 12 | G 7230 | 09.05.1997 | DECE, BE | மிருகசீரிஷம் | Junior Engineer | Rs.30,000/- PM |
| 13 | G 7231 | 18.03.1993 | B.E. M.E. | உத்திராடம் | Procurement Management | Rs.6 Lakhs / PM |
| 14 | G 7232 | 04.04.1999 | MBBS | விசாகம் | DMO-Infosys | Rs.50,000/- PM |
| 15 | G 7233 | 19.11.1995 | B.E. | அஸ்தம் | Software Professional | Rs.8-9 Lakhs / PA |
| 16 | G 7234 | 04.06.1995 | MBBS, MD | ஆயில்யம் | Doctor | Rs.1 Lakh / PM Stipend |
| 17 | G 7235 | 17.04.1994 | B.E. | திருவாதிரை | —- | —- |
| 18 | G 7236 | 29.10.1998 | B.Tech. M.S. | திருவோணம் | USA | —- |
| 19 | G 7237 | 02.06.1996 | B.Tech. | கேட்டை | Product Manager | Rs.2 Lakhs / PM |
| 20 | G 7238 | 12.06.1996 | MBBS, MS-OG | பரணி | Government Doctor | Rs.8-9 Lakhs / PM |
| 21 | G 7239 | 20.01.2002 | B.Sc. MBA | ரேவதி | —- | —- |
| 22 | G 7240 | 26.09.1998 | B.E. | அனுஷம் | —- | —- |




ரெட்டி இளைஞர் பேரவை நடத்தும்

# ரெட்டி திருமணத் தகவல் மையம்

எண் 34A, கங்கையம்மன் கோவில் தெரு, ஜாபர்கான்பேட்டை,
சென்னை - 600 083. காசி தியேட்டர் எதிரில், காமராஜ் சிலை அருகில்
044 - 2485 3333, 96888 77700 E-mail : reddymatrimonired@gmail.com,
for online Registration website : www.reddymatrimony.co.in


## மணமகன்

| எண் | பதிவு எண் | பிறந்த தேதி | படிப்பு | நட்சத்திரம் | பணியிடம் | வருமானம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | B 10818 | 10.10.1991 | B.E. | சுவாதி | Sydney, Australia | Rs.55 Lakhs / PA |
| 2 | B 10819 | 07.10.1994 | B.E. MBA | சுவாதி | TCS | Rs.10.5 Lakhs / PA |
| 3 | B 10820 | 16.06.1993 | B.Com. MBA | பரணி | Assist Manager, PWC | Rs.21 Lakhs / PA |
| 4 | B 10821 | 03.12.1997 | B.E. | பூராடம் | Software Engineer | Rs.12 Lakhs / PA |
| 5 | B 10822 | 29.05.1997 | B.E. | சதயம் | Software Engineer | Rs.10 Lakhs / PA |
| 6 | B 10823 | 21.06.1990 | B.Tech., | ரோகிணி | Bakery Chef | Rs.40,000/- PM |
| 7 | B 10824 | 13.07.1995 | B.E. | திருவோணம் | Sr.Software Engineer | Rs.1.5 Lakhs / PM |
| 8 | B 10825 | 22.09.1994 | B.E. MBA | அஸ்வினி | ICICI Bank | Rs. 5 Lakhs / PA |
| 9 | B 10826 | 24.04.1992 | B.E. MBA. MS. | உத்திராடம் | Germany | 50,000 Euro / PA |
| 10 | B 10827 | 01.08.1996 | B.E. | சதயம் | Wipro | Rs.7 Lakhs / PA |
| 11 | B 10828 | 22.08.1997 | B.E. | ரேவதி | Software Developer | Rs.30 Lakhs / PA |
| 12 | B 10829 | 02.08.1995 | B.Tech. MS | சித்திரை | Canada | Rs.3 Lakhs / PM |
| 13 | B 10830 | 14.01.1999 | B.Sc. | கேட்டை | Germany | Rs.60 Lakhs / PA |
| 14 | B 10831 | 29.10.1999 | MBA | மிருகசீரிஷம் | Own Business | --- |
| 15 | B 10832 | 16.04.1999 | B.E. MS | அஸ்வினி | USA | --- |
| 16 | B 10833 | 31.08.1995 | MBBS, DNB | விசாகம் | Doctor | Rs.90,000/- PM |
| 17 | B 10834 | 03.09.1994 | B.E. | பூசம் | Support Engineer | Rs.30,000/- PM |
| 18 | B 10835 | 02.06.1998 | B.Tech. | பூரம் | Senior Engineer | Rs.1 Lakh / PM |
| 19 | B 10836 | 12.04.1997 | B.Tech. PGDM | மிருகசீரிஷம் | Senior Engineer | Rs.70,000/- PM |
| 20 | B 10837 | 25.05.1989 | B.E. | உத்திராடம் | Bank of America | Rs.26.5 Lakhs / PA |
| 21 | B 10838 | 06.03.1995 | B.E. M.Tech. MBA | பரணி | Deputy Manager, Axis Bank | Rs.8 Lakhs / PA |
| 22 | B 10839 | 11.12.1995 | B.E. MS | பூரம் | Europe | Rs 34 Lakhs / PA |
| 23 | B 10840 | 27.04.1997 | B.E. | மூலம் | Business Analyst | Rs.26 Lakhs / PA |

# தபால் பெட்டி



கடந்த மாதம் வெளியான மாணவர் பகுதியில் பிள்ளைகளிடம் 'ஆரோக்கியமான மனநலத்தை வளர்ப்போம்' என்ற கட்டுரையினை படித்தேன். தற்கால சூழ்நிலைக்கேற்ற கட்டுரை. ஒரு மனிதனின் உடல் மற்றும் உள்ளம் நல்ல நிலையில் இருந்தால் மட்டுமே ஆரோக்கியம் முழுமை பெறும். இது சத்திய வார்த்தை. மன செயல்பாட்டுக் கூறுகள், அறிவுத்திறன் குறியீடு (IQ), மனோபாவங்களின் வெளிப்பாடு குறியீடு (EQ), சமூகத்தில் பழகுதல் குறியீடு (SQ), நெருக்கடி கால மேலாண்மைக் குறியீடு இவற்றைப்பற்றிய விரிவான அலசல் ஒவ்வொரு மாணவனும், அவனது பெற்றோர்களும் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டிய ஒன்று.

மேற்குறிப்பிட்டவைகளை ஒவ்வொன்றாக மாதம் ஒருமுறை விரிவாக உதாரணங்களுடன் கட்டுரைகளாக வெளியிட்டால் இன்னும் சிறப்பாக மாணவர்களின் முன்னேற்றத்திற்கு இக்கட்டுரைகள் உதவியாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இக்கட்டுரையை எழுதிய விழுப்புரம் திரு.இராஜசேகரன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.

**- திரு.N.விஸ்வநாதன், நாமக்கல்.**

கே.ஆர்.டி. கேரியர் அகாடமி சார்பாக மத்திய, மாநில அரசுப் பணிகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் சிறப்பாக நடந்துவருவதாக அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதுக்குறித்து விரிவாக மாதந்தோறும் எதிர்வரும் தேர்வுகள் அதற்கான பயிற்சி வகுப்புகள் தொடங்கும் கால அட்டவணை குறித்த விவரங்களை வெளியிட வேண்டும். அவ்வாறான தகவல்களை எங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் கொண்டு சென்று அரசுப் பணிக்கு செல்ல விரும்பும் மாணவ, மாணவிகள் தங்கள் பயிற்சி வகுப்பில் சேர்ந்திட உதவ எண்ணுகிறோம். நன்றி.

**- திரு.S.சேகர், நங்கவள்ளி, சேலம்.**

'துக்கத்தில் துணை நிற்போம்' கட்டுரைப் படித்தேன். மிகவும் யதார்த்தமான கட்டுரை. கிராமப் பகுதிகளை விட நகரப்பகுதிகளில் வியாபாரம் மற்றும் வேலை காரணமாக வெளியூர்களிலிருந்து வந்து தங்கியிருப்பவர்கள் அவர்கள் வீட்டில் ஏதேனும் இறப்பு ஏற்பட்டால் அனுபவிக்கும் சங்கடங்கள் ஏராளம். அடக்கம் பண்ணும் இடம் குறித்த தகவல் பெறுவதில் சிரமம், மருத்துவ சான்றிதழ் பெறுவதில் சிரமம், இறுதி சடங்கு செய்வதற்கென உள்ளவர்களை தேடுவதில் சிரமம். இதெற்கெல்லாம் முத்தாய்ப்பாக இவற்றிற்கான செலவினத்தை சமாளிப்பதில் சிரமம். இதை சந்தித்தவர்களுக்குத் தான் தெரியும் இது எவ்வளவு பெரிய கொடுமை என்று. இக்கொடுமையை எவ்வாறு தீர்ப்பது என்று இக்கட்டுரை தெளிவாக விளக்குகிறது. சங்க நிர்வாகிகள் உறுதியாக இந்தக் குறை இல்லாத வண்ணம் நடந்து கொள்வார்கள். துக்கத்தில் துணை நிற்க உறுதி கொள்வோம்.

**- திரு.இந்திரஜித், டோல்கேட், திருச்சி**

'தத்தளிக்கும் சென்னை' கட்டுரை படித்தேன். வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், வெள்ளநீர் வடிகால்களை வடிவமைக்கவும், சுற்றுச் சூழல் நகர திட்டமிடுதல், பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளின் வல்லுநர்களை உள்ளடக்கிய சென்னை பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு அமைக்கப்படும் என அரசு பலமுறை அறிவித்தாலும் அறிவிப்புகள் முழுமை பெறவில்லை என்பதே உண்மை. நாம் சென்னையில் புதிய வீடுகள் வாங்கும் முயற்சியில் இறங்கும்போது அந்த இடம் கடந்த வெள்ளத்தில் எவ்வாறு பாதிக்கப்பட்டது, எத்தனை நாட்களில் வெள்ளநீர் முற்றிலும் வடிந்தது, வடிகால் வசதி எவ்வாறு உள்ளது போன்ற அடிப்படை உண்மைகளை தெரிந்து கொள்ளவேண்டும் என்ற தங்கள் ஆலோசனை ஏற்புடையது.

அதே போன்று மாநிலத் தலைநகரம் தமிழ்நாட்டின் மையப்பகுதியான திருச்சிக்கு மாற்றப்பட்டால் இவ்வாறான பிரச்சனைகளுக்கு தீர்வாக அமையும் என்ற தங்களின் யோசனை முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் நிறைவேற்றப்படாத ஆசைகளில் ஒன்றாகும்.

நாம் ஒவ்வொருவரும் நம் வீடுகளில் ஏற்படும் பிளாஸ்டிக்கழிவுகளை சரியான முறையில் அப்புறப்படுத்துவதோடு, நாம் கடைகளுக்கு செல்லும்போது துணிப்பைகளை கைகளில் எடுத்துச்சென்று பிளாஸ்டிக் பைகளை வீட்டிற்கு கொண்டு வருவதை தவிர்த்து நாட்டிற்கு நலம் பயப்போம். தாங்கள் பிளாஸ்டிக் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகளைக் குறித்து விரிவாக ஒரு கட்டுரை எழுதுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**- திரு.விஸ்வநாதன், மந்தைவெளி, சென்னை.**

**திரும்ப பெற முடியாதவை :**

1. **உடலை விட்ட உயிர்....**
2. **பேசி விட்ட வார்த்தை....**
3. **கடந்து விட்ட நாட்கள்....**
4. **இழந்து விட்ட இளமை...**
5. **கொடுத்து விட்ட வாக்கு....**

## அன்பான வாசகர்களே!

**தபால் பெட்டி பகுதிக்கு உங்களின் கருத்துகளை எழுதி அனுப்புங்கள். நிறையோ, குறையோ உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும் அஞ்சலட்டையில் உங்களின் எண்ணங்களை எழுதி அனுப்புங்கள். தன்னம்பிக்கை வரலாறு, சாதனையாளர்களின் வெற்றி செய்தி, கதைகள், கட்டுரைகள் மற்றும் ரெட்டியார் சமூக, சங்க செய்திகளை எழுதி அனுப்பலாம். எங்களுக்கு வரும் மடல் மூலம் உங்களின் தேவை அறிந்து கொண்டு அதற்கேற்ப சிறப்பான கட்டுரைகளை உங்களுக்குத் தரமுடியும். கடிதங்களை ரெட்டி மலர் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.**

# தமிழக தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரண உதவிகள்











REDDY MALAR, Tamil Monthly, RNI No. TNTAM/2006/18783, R.Dis.No.63/2021
Date of Publication : 1st week of Every Month




Printed by S.SUNDAR RAMAN and Published by V.SELVARAJU on behalf of REDDY ELAINGER PEREVAI and Printed at VASAN PRINT MFG CO, 29, Dr.Besant Road, Chennai - 600 014 and Published at New No.34A, Old No.36/1A, Gangai Amman Koil Street, Jafferkhanpet, Chennai - 600 083. Editor : D.MUTHURAMAN.